வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 29.11.2024 வெள்ளிக்கிழமை | இதழ் : 332 | பக்கங்கள் : 12




# வடக்கு - கிழக்கில் கல்வி,தொழிற்றுறை மேம்படுத்தப்பட வேண்டியது அவசியம்!

## உலக வங்கியிடம் எடுத்துரைத்தார் ஜனாதிபதி

கொழும்பு, நவம்பர் 29

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் பொருளாதார முன்னேற்றத்தை உறுதிப்படுத்தல், குறிப்பாக கல்வி, சுகாதாரம், மனிதவள அபிவிருத்தி தொடர்பில் உலக வங்கியின் தலைவர் அஜே பங்காவுக்கு விளக்கமளித்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, இந்த பகுதிகளில் காணப்படும் தொழிற்படையின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கல்வி மற்றும் தொழில்கல்வித் துறைகளை மேம்படுத்தவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

11





## உயர்தரப் பரீட்சைகள் மீண்டும் ஒத்திவைப்பு!

கொழும்பு, நவ. 29

சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை மேலும் மூன்று நாட்களுக்கு நடத்துவதில்லை எனப் பரீட்சை திணைக் களம் தீர்மானித்துள்ளது.

உயர்தரப் பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் 4 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித்

11

## பாதுகாப்புச் செயலர் தலைமையில் நேற்று யாழ். இடர் நிலைமைகள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்ப்பாண மாவட்டத்தின் சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமையினை கண்டறியும் நோக்கிலான உயர் மட்ட கலந்துரையாடல் நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இவ் உயர்மட்டக் கலந் துரையாடலுக்கு பாதுகாப்பு செயலாளர்

11



## யாழ்ப்பாணத்தில் மழை வெள்ளத்தால் 19 ஆயிரத்து 560 குடும்பங்கள் பாதிப்பு!

### 161 வீடுகள் பகுதியளவில் சேதம்

யாழ்ப்பாணம்,நவ. 29

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடைமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் ஏனைய அனர்த்தங்களால் 19,ஆயிரத்து 560 குடும்பங்களைச் சேர்ந்த 64ஆயிரத்து 621பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 161வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் மூன்று வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளது. அத்துடன் 7 உட்கட்டமைப்புகள் முழுமையாகவும், 8 சிறு மற்றும் மத்தி முயற்சிகள் 7 பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அனர்த்தத்தால் ஒருவர் காயமடைந்துள்ளார்.

77 பாதுகாப்பு முகாம்களில் இரண்டாயிரத்து 113 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 271 பேர் தங்கவைக் கப்பட்டுள்ளனர்

11



## கற்கோவளம் சென்ற பாதுகாப்புச் செயலர்

### வெள்ள நிலைமையை பார்வையிட்டார்

வடமராட்சி, நவ. 29

சீரற்ற காலநிலை காரணமாக பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் அதிக பாதிப்புக்கு உள்ளான கற்கோவளம் புனிதநகர் கிராமத்துக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நேற்று வியாழக்கிழமை முற்பகல் காலை திடீர் விஜயம்

11

## அனர்த்த நிலை காரணமாக இதுவரை 13 பேர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 29

நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமை காரணமாக இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் 17 பேர் காயமடைந்துள்ளதுடன் மேலும் இருவர் காணாமல்போயுள்ள அனர்த்த

11

## மாவீரர் தினத்தை வடக்கில் எப்படி அனுஷ்டிக்க முடியும்?

### கேள்வி எழுப்புகிறது பொதுஜன பெரமுன

கொழும்பு, நவ. 29

விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பாக அறிவித்து தடை செய்யப்பட்டுள்ள நிலையில் வரையறைகளுடன் மாவீரர் தினத்தை எவ்வாறு அனுஷ்டிக்க இடமளிக்க முடியும். இவ்வாறான செயற்பாடுகளினால் எதிர்காலத்தில் இலங்கையில் ஒசாமா பின் லேடனையும் அனுஸ்டிக்க நேரிடும் என பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் மனோஜ் கமகே தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

11

## வடக்கு-கிழக்கில் சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் சிலருக்கு இடமாற்றம்!

வவுனியா, நவ. 29

வடக்கு- கிழக்கில் பணியாற்றிய சுகாதார சேவைகள் திணைக்களப் பிரதி பணிப்பாளர் மற்றும் வைத்தியசாலை பணிப்பாளர்கள் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, வைத்தியர் ஆர்.முரளிஸ்வரன் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். வைத்தியர் ஜி.சுகுணன் மட்டக்களப்பு கல்முனை வடக்கு வைத்தியசாலையின் பணிப்பாளராகவும், வைத்தியர்

11



## நெடுந்தீவு நோயாளர்கள் ஹெலி மூலம் யாழுக்கு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், நவ. 29

நெடுந்தீவு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற 03 நோயாளர்கள் மேலதிக சிகிச்சையளிக்கும் வகையில் விமானப்படையின் உலங்குவானூர்தி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டனர்.

நெடுந்தீவு வைத்தியசாலையின் ஏற்பாட்டில்

11

## ஆழ்ந்த காற்றழுத்த தாழமுக்கம் படிப்படியாகக் குறைவடையும்!

கொழும்பு, நவ. 29

தென்கிழக்கு வங்காள விரிகுடா பகுதியில் ஏற்பட்ட ஆழ்ந்த காற்றழுத்த தாழமுக்கம் காரணமாக, நிலவும் சீரற்ற காலநிலை நாளை முதல் படிப்படியாகக் குறைவடையும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். போதனா மருத்துவமனை முழுமையான சேவை வழங்குகிறது

## பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

வெள்ளப்பெருக்கு காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சில விடுதி பகுதிகளில் நீர் புகுந்துள்ளது. மேலும், பல ஊழியர்களின் வீடுகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால், அவர்கள் வேலைக்கு வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தமது வீட்டில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும் பொருட்படுத்தாமல் பல ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்தார்


தொடர்ந்து மழை பெய்து கொண்டிருப்பதால், சாதாரண வைத்திய சேவைகளை வழங்குவதில் சிக்கல்கள் இருக்கக்கூடும் என அறிவித்திருந்தோம். இருப்பினும் பெரும்பாலான ஊழியர்கள் மக்களுக்கான சேவைகளை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் கடமைக்கு வந்துள்ளார்கள். ஆகையால் அனைத்து சேவைகளும் வழமை போன்று நடைபெறுகின்றன.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சில விடுதிகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது. அந்த வெள்ளத்தை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

அனர்த்தம் காரணமாக விபத்துக்களால் பாதிக்கப்பட்ட அல்லது தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இனிமேல்தான் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் எதிர்காலத்தில் டெங்கு நோய்த் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களும் மருத்துவமனைக்கு வருகை தரக்கூடும் என எதிர்பார்க்கின்றோம். ஆகையால் அவர்களுக்கு தேவையான சிகிச்சைகளை வழங்குவதற்கு நாங்கள் தயாராகவுள்ளோம்.

மருத்துவமனை ஊழியர்களின் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து அவர்களும் பாதிக்கப்பட்டுள்ளதால், அவர்களது வரவு குறைவாக இருக்கும் என்ற அடிப்படையில் சத்திர சிகிச்சைகள் இடம்பெறாது என அறிவித்திருந்தோம். இருப்பினும் அவர்கள் கடமைகளுக்கு வந்துள்ளதால் சேவைகள் அனைத்தும் வழமைபோன்று இடம்பெறுகின்றன.

பிரதான சத்திர சிகிச்சை கூடத்தில் எட்டு சத்திர சிகிச்சை பிரிவுகள் உள்ளன. அந்த அனைத்து பிரிவுகளிலும் வழமை போன்று சத்திர சிகிச்சைகள் இடம்பெறுகின்றன. எனவே மக்கள் வழமை போன்று சேவைகளை பெற்றுக் கொள்ளலாம் - என்றார். (எ-5)



# மரம் முறிந்து வீட்டு கூரை சேதம்

முல்லைத்தீவு, நவ. 29

முள்ளியவளை பகுதியில் மரம் முறிந்து வீட்டுக் கூரையின் மீது விழுந்ததால் வீட்டின் கூரை முற்றாக சேதமடைந்த சம்பவம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இடம்பெற்றுள்ளது.

காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்த நிலையில், கரை துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளியவளை முதலாம் வட்டாரம் கிராமத்தில் உள்ள வீடொன்றில் நேற்று முன் தினம் அதிகாலை வீட்டின் அருகில் இருந்த பெரிய புளிய மரம் முறித்து விழுந்துள்ளது.

அதனையடுத்து வீட்டின் கூரை முழுதாக சேதமடைந்தது.

குறித்த சம்பவத்தின்போது வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தவர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர். (அ)

# முல்லைத்தீவில் அடைமழையால் 1495 குடும்பங்கள் பெரும் பாதிப்பு!

முல்லைத்தீவு, நவ. 29

நாட்டில் நிலவும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களின் இயல்புநிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் நேற்று முன் தினம் மாலை வரை ஆயிரத்து 495 குடும்பங்களை சேர்ந்த 4 ஆயிரத்து 644 பேரின் இயல்பு நிலை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வெள்ளப் பாதிப்பு தொடர்பாக மாலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார். (அ)

# இடைத்தங்கல் முகாம்களில் நேற்று முதல் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்ப்பாணத்தில் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களுக்கான மருத்துவ முகாம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு நேற்று மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

இதில் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ஸ்ரீ பவாநந்தராஜா, வைத்தியர்கள் தாதியர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் யாழ். நல்லூர் பகுதியில் மழை மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (அ)

# 64000 ஹெக்ரேயர் நெற்செய்கை வடக்கில் மழையினால் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

மழை வெள்ளம் காரணமாக வடக்கு மாகாணத்தில் சுமார் 64000 ஹெக்ரயார் நெல் வயல்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் கூடுதல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் சுமார் 23000 ஹெக்ரேயர் நெல் வயல்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதிகளவான பகுதிகளில் நெல் விதைக்கப்பட்ட சில தினங்களில் இவ்வாறு மழை வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அநேக பகுதிகளில் குளக்கட்டுக்கள் உடைந்த காரணத்தினால் இவ்வாறு பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களுக்கு அரசாங்கம் நட்டஈடு வழங்கினாலும், அடுத்த போகத்தில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாய நிலை காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# வெள்ளத்தில் மிதந்த சொகுசு கார்!

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்ப்பாணம் - மன்னார் வீதியில் சொகுசு கார் ஒன்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது.

குறித்த வீதியில் உள்ள பாலியாறு - சிப்பியாற்றுக்கு இடையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கனமழையின்போது வீதியினூடாக சென்ற கார் ஒன்றே இவ்வாறு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த கார் பின்னர் கடற்படையினரால் மீட்கப்பட்டது. (அ)



# குளத்துக்குள் தவறி விழுந்த இளைஞனின் சடலம் மீட்பு!

வவுனியா, நவ. 29

வவுனியா- மகாகச்சகொடி குளத்தில் கடந்த 26 ஆம் திகதி தவறி விழுந்த இளைஞனின் சடலம் நேற்று காலை மீட்கப்பட்டது.

கடந்த 26 ஆம் திகதி தனது நண்பன் ஒருவருடன் மகாகச்ச கொடி குளத்திற்கு நீராடச் சென்றபோது கால் தவறி குளத்துக்குள் குறித்த இளைஞர் விழுந்துள்ளார்.

இதனையடுத்து ஊர் மக்கள் குறித்த இளைஞனை தேடியதுடன் மாமடு பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர். எனினும் மூன்று நாட்களாக இளைஞன் கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்நிலையில் குறித்த இளைஞனின் சடலம் அந்த குளத்தில் இருந்து நேற்று காலை மீட்கப்பட்டது.

வவுனியா, மகாகச்சகொடி பகுதியைச் சேர்ந்த 21 வயதான சிரந்தஹசன் குணவர்த்தன என்ற இளைஞரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது. (அ-10)

# வவுனியாவில் கடும் மழை; 1048 குடும்பங்கள் பாதிப்பு

வவுனியா, நவ. 29

வவுனியா மாவட்டத்தில் கடும் மழை, வெள்ளம் காரணமாக ஆயிரத்து 48 குடும்பங்களை சேர்ந்த 3 ஆயிரத்து 492 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தமது இருப்பிடங்களில் இருந்தும் வெளியேறியுள்ளதாக, மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

இடைவிடாத தொடர்சியாக பெய்த கனமழையால் வவுனியா மாவட்டத்தில் பாரிய இடர்நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் பல கிராமங்கள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வவுனியா வடக்கு, பிரதேச செயலாளர் பிரிவில் 140 குடும்பங்களை சேர்ந்த 490 பேரும், வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் 746 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 568 பேரும், செட்டிகுளம் பிரிவில் 148 குடும்பங்களை சேர்ந்த 495 பேரும், வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலாளர் பிரிவில் 14 குடும்பங்களை சேர்ந்த 39 பேரும் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 2 ஆயிரத்து 709 பேர் அவர்களது இருப்பிடங்களில் இருந்து வெளியேறி உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர். 126 குடும்பங்களை சேர்ந்த 363 பேர் 11 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வெள்ளப் பாதிப்பு காரணமாக செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் 67 வீடுகளும், சிங்கள பிரதேச செயலாளர் பிரிவில் 2 வீடுகளுமாக 69 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளதாக, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது

அதிகரித்த மழைவீழ்ச்சி காரணமாக வவுனியா மாவட்டம் தழுவிய ரீதியில் 46 குளங்களில் பாரிய உடைவு ஏற்பட்டுள்ளது. மேலும் 226 குளங்கள் சேதமடையக்கூடிய நிலையில் உள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-10)

# வீட்டுக்குள் நுழைந்த சிறுத்தை விசுவமடுவில் நேற்று சம்பவம்

முல்லைத்தீவு, நவ. 29

முல்லைத்தீவு, விசுவமடு இளங்கோபுரம் கிராமத்தில் திடீரென சிறுத்தை ஒன்று வீட்டுக்குள் நுழைந்தது.

இதனையடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து அந்தத் திணைக்களத்தினர் குறித்த சிறுத்தையை பிடித்துக் கொண்டு சென்றனர்.

இதேவேளை, தற்போது நிலவும் சீரற்ற வானிலையால் காடுகளுக்கு அருகில் வசிப்பவர்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஊூவஞ
28.11.2024 புதன்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## நினைவேந்தல் முடிவுற்றது - அடுத்தது?

இம்முறை மாவீரர் தினம் தடைகள் இன்றி நினைவுகொள்ளப்பட்டிருக்கின்றது. கடந்த பதினைந்து வருடங்களில் இவ்வாறானதொரு சூழல் நிலவியதில்லை. இது அநுரகுமார அரசாங்கத்தினால்தான் என்பதையும் மக்கள் புரிந்திருப்பர். இவ்வாறானதொரு சூழலைத்தான் மக்களும் விரும்பியிருந்தனர். அவர்களைப் பொறுத்தவரையில், தங்களின் பிள்ளைகளை நினைத்து, மனமுருகி, கண்ணீர் சிந்துவதில் எந்தத் தடையும் இருக்கக் கூடாது. உண்மையில் எந்தவோர் அரசியல் தலையீட்டையும் அவர்கள் விரும்பவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தியாகங்களை அரசியலாக்கும் தகுதி நாடாளுமன்ற போட்டிப் பரீட்சை அரசியல்வாதிகளுக்கு இல்லை என்றே அவர்கள் நம்புகின்றனர் போலும். அவ்வாறு செய்வதை மக்கள் வெறுக்கின்றனர். அது சரியானதுதான்.

வடக்கின் கொதிநிலையை வைத்து தங்களின் ஆதாய அரசியலை முன்னெடுக்க முற்படும் தென்னிலங்கை சக்திகளுக்கும் சில விடயங்கள் தேவைப்பட்டன. அதேபோன்று, தென்னிலங்கையின் தடைகளை முன்வைத்து, அரசியல் செய்யவேண்டிய தேவையுள்ளவர்கள் வடக்கு கிழக்கிலும் இல்லாமில்லை. ஆனால், இம்முறை மேற்படி இரண்டு தரப்புக்கும் வாய்ப்புகள் கிடைக்கவில்லை. ஏனெனில் அநுர அரசாங்கம் அதற்கான வாய்ப்பை வழங்கவில்லை. அநுர அரசாங்கம் இந்த நிலைமையை தொய்வில்லாமல் தொடருமாயின், காலப்போக்கில் இது ஒரு சாதாரண விடயமாக மாறிவிடும். பொலிஸாரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

மாவீரர் தினத்தை அனுமதித்தால் அது விடுதலைப் புலிகளின் மீளுருவாக்கத்துக்கு வழிவகுக்கும் என்னும் கதையை, அவ்வப்போது, தென்னிலங்கை அடிப்படைவாதிகள் கூறிவந்திருக்கின்றனர். இது அடிப்படையிலேயே தவறான புரிதல் என்பது இலங்கையின் அரச இயந்திரத்துக்கும் தெரியாத ஒன்றல்ல - ஆனால், அரசியல் தலைமைகளின் தேவைக்காக அவர்களும் அமைதியாக ஒத்துழைத்தனர். விடுதலைப் புலிகள் இயக்கத்தை எவராலும் மீளுருவாக்கம் செய்ய முடியாது. விடுதலைப் புலிகள் இயக்கம் என்பது ஒரு முடிந்த கதை. மக்கள் இப்போது அஞ்சலி செலுத்திக் கொண்டிருப்பது - கொட்டும் மழையிலும் கூட, மழைநீருடன் தங்கள் கண்ணீரையும் கலந்தது, விடுதலைப் புலிகள் தொடர்பானதுமல்ல - மாறாக அவர்களது பிள்ளைகள், உறவுகள் தொடர்பானது.

கடந்த பதினைந்து வருடங்களில் அதிகம் விடுதலைப் புலிகளுக்கு நெருக்கமானவர்களாக தங்களை காண்பித்தவர்கள் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்காரர்கள்தான் ( தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ) ஆனால், தேர்தலில் அவர்களை ஒரு பிரதான தரப்பாக மக்கள் இன்றுவரையில் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில், மக்கள் விடுதலைப் புலிகளை ( உயிர் கொடுத்த தங்களின் பிள்ளைகளை ) முன்வைத்து நாடாளுமன்ற கதிரைகளுக்காக அடிபடுவதை சகித்துக்கொள்ளவில்லை - அதனை அவர்கள் வெறுக்கின்றனர். இதன் காரணமாகவே விடுதலைப் புலிகளை முன்வைத்து அரசியல் பேசும் தரப்புகள் எவருக்கும் மக்கள் பெருவாரியாக ஆதரவளிக்கவில்லை. அதேவேளை நாங்கள் முன்னாள் போராளிகள் - எங்களை ஆதரியுங்கள் என்று கூறுபவர்களையும் மக்கள் ஆதரிக்கவில்லை. இதனை சம்பந்தப்பட்டவர்கள் இனியாவது புரிந்துகொண்டு, அரசியல் செயல்பாடுகளை, தங்களுக்குரிய தனித்துவத்துடன் முன்னெடுக்க முயற்சிக்க வேண்டும்.

மக்கள் கொட்டும் மழையிலும் நனைந்து, தங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தியிருப்பதை, பாருங்கள் இதோ தேசம் திரண்டுவிட்டதாகக் கூறி, மக்களின் உணர்வுகளை மீண்டும் கொச்சைப்படுத்தாதீர்கள்.

நினைவு தினங்கள் இனியும் வரும் - மக்கள் வழமைபோல் திரள்வார்கள். எனவே அதற்காக காத்துக்கொண்டிருக்கும் கையறுநிலை அரசியலை மேற்கொள்ளாமல், உங்களின் அரசியல் செயல்பாடுகளை தனித்துவமாகவும், காலப்பொருத்தம் கருதியதாகவும், எவ்வாறு கட்டியெழுப்பலாம் என்பது தொடர்பில் சிந்தியுங்கள். இனியாவது அடுத்தவர்களின் தியாகங்களை வியாபாரம் செய்யும் அரசியலை கைவிடுங்கள்.

### வடமாகாண மரநடுகை மாதம்
### கார்த்திகை - 2024

"மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும்
உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும்
ஒன்றாகும்."
- ஸ்டேர்லிங் மோர்ட்டன் (அமெரிக்க அரசியலாளர்)



## சந்நிதியான் ஆச்சிரமத்தால் சமைத்த உணவு வழங்கல்

வடமராட்சி நவ.28

யாழ்ப்பாணத்தில் மழை - வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமம் சமைத்த உணவுகளை வழங்கி வருகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நல்லூர் - சங்கிலியன் தோப்பு மற்றும் குருநகர் தொடர்மாடி பகுதி மக்களுக்கு இவ்வாறு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், தொண்டர்களுடன் சென்று உணவுப் பொதிகளை வழங்கி வைத்தார். (எ-02)



## மழை, வெள்ள நிலவரம் குறித்து வவுனியாவில் அவசர கூட்டம்

வவுனியா, நவ. 29

வவுனியாவில் கடந்த சில நாட்களாக ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை தொடர்பில் ஆராய்வதற்கான விசேட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்றுக் காலை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்புகள் தொடர்பாகவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

குறித்த கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், காதர் மஸ்தான், ம. ஜெகதீஸ்வரன், து. ரவிகரன், செ. திலகநாதன், ப. சத்தியலிங்கம் மற்றும் மாவட்ட செயலாளர் பி. ஏ. சரத்சந்திர, பிரதேச செயலாளர்கள், அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், பொலிஸார், படையினர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ)

## மன்னாரில் மழை, வெள்ளத்தால் இதுவரை 61 ஆயிரம் பேர் பாதிப்பு

மன்னார், நவ. 29

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வந்த கடும் மழை மற்றும் அதனால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக 16 ஆயிரத்து 774 குடும்பங்களைச் சேர்ந்த 61 ஆயிரத்து 674 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த மாவட்டத்தில் 73 தாற்காலிக பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் குறித்த நிலையங்களில் 2 ஆயிரத்து 845 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 156 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதேவேளை, மழை - வெள்ளம் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டும், நலன்புரி நிலையங்களுக்கு செல்லாது வீடுகளிலும், உறவினர்களின் வீடுகளிலும் உள்ள மக்களுக்கு எவ்வித உதவிகளும் கிடைக்கவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

நலன்புரி நிலையங்களுக்கு வருகிறவர்களுக்கு மாத்திரம் உதவிகள் வழங்கப்படும் என உரிய அதிகாரிகள் தெரிவித்து வருகின்றனர்.


எனினும், நலன்புரி நிலையங்களில் காணப் படும் இட நெருக்கடி மற்றும் மலசல கூட பிரச்னைகளை கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட பலர் நலன்புரி நிலையங்களுக்கு செல்லாமல் தமது வீடுகளிலும், நண்பர்களின் வீடுகளிலும் பல்வேறு இடர்களுடன் வசித்து வருகின்றனர்.

எனவே, இந்த மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட மக்கள் என்ற அடிப் படையில் அனைவருக்கும் நிவாரணம் வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கடினமான வேலைகளையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதரர்வகையில் பயனடைவீர்கள். மனைவி வழியில் ஆதரவு பெருகும். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். சாதிக்கும் நாள்.

**இடபம்**
உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். பண வரவு திருப்தி தரும்.

**மிதுனம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். எதிர்பார்த்த லாபம் வரும்.

**கடகம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வெளிவட்டாரத்தில் கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. புது அனுபவம் உண்டாகும்.

**சிம்மம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். சொத்து பிரச்னை ஒன்று தீரும்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். புது அதிகாரி உங்களை மதிப்பார்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். யாரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவு வரும்.

**விருட்சிகம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். எதிர்மறை எண்ணங்கள் வந்து செல்லும். வாகனத்தில் கவனம் தேவை.

**தனுசு**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுக்குள் வரும். புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள்.

**மகரம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். சிலரின் உதவியை நாடுவீர்கள். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்துகொள்வீர்கள்.

**கும்பம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். உடல் நலம் சீராகும். தொழில் லாபம் அதிகரிக்கும்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். குடும்பத்தில் சிறு வார்த்தைகள் கூட பெரிய தகராறில் போய் முடியும். விட்டுக் கொடுக்க வேண்டிய நாள்.

# யாழில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப்பொருட்கள் வழங்க ஏற்பாடு

## தயக்கமின்றி பிரதேச செயலகங்களை நாடுங்கள்

யாழ்ப்பாணம், நவ. 29

பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு சமைத்த உணவுகளை வழங்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளில் தங்கியிருக்கின்ற சந்தர்ப்பத்தில் அவர்கள் தங்களால் சமைக்க முடியாது என்று பிரதேச செயலாளர்கள் ஊடாக உறுதிப்படுத்துகின்ற பட்சத்தில் அவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன என யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

மேலும், தற்போது பெய்து வரும் அடைமழை காரணமாக பாதிக்கப்படுகின்ற மக்களை, உயர்தரப் பரீட்சை நடைபெறுகின்ற பாடசாலைகளை தவிர ஏனைய பாடசாலைகளில் தங்க வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பல தொண்டு நிறுவனங்களும் தனி நபர்களும் எங்களைத் தொடர்பு கொண்டு உதவி செய்வதற்கு முன் வந்திருக்கின்றார்கள். அந்த வகையில் அந்தந்த பிரதேச செயலகங்களில் ஒரு முறை ஏற்படுத்தப்பட்டு அங்கு ஒரு பொறுப்பான பதவி நிலை உத்தியோகத்தரின் தலைமையிலே, வழங்கப்படுகின்ற உணவுப்பொருட்களை அல்லது வேறு பொருட்களை சேமித்து வைத்து தேவையின் அடிப்படையில் பொதுமக்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. கிடைக்கப்பெறுகின்ற பொருட்கள் என்னென்ன என்று பிரதேச செயலாளர்கள் மாவட்ட செயலகத்துக்கு அறிவிக்க வேண்டும் என்ற நடை முறை காணப்படுகின்றது.

பாதுகாப்பு நிலையங்களுக்கு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டால் மக்கள் தயக்கம் இன்றி அங்கு செல்ல முடியும். உங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு பிரதேச செயலகங்களில் உள்ள உத்தியோகத்தர்கள் தயாராகவுள்ளனர்.

தொற்று நோய் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் உள்ளன. ஆகை யால் நாங்கள் பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு, மக்களுடைய சுகாதாரம் சார்ந்த பாதுகாப்பு பொறிமுறையையும் சரியான முறையில் முன்னெடுக்க வேண்டிய தேவைப் பாடு உள்ளது.

மேலும், அனர்த்தங்கள் ஏற்பட்டால் 24 மணி நேரமும் இயங்கும் 117 அல்லது 07739 57894, 0212221676 அல்லது 0212117117 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொண்டு பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்- என்றார். (எ-05)

# 208 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவு வெள்ளக்காடாக மாறிய வவுனியா!

## 46 குளங்கள் உடைப்பெடுப்பு



வவுனியா, நவ. 29

வவுனியா மாவட்டத்தில் 208 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. 46 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன. இதனால், மாவட்டத்தின் பல பிரதேசங்கள் வெள்ளக்காடாக மாறியுள்ளன.

வவுனியாவில் பெய்து வரும் கடும் மழையால் 1048 குடும்பங்களைச் சேர்ந்த 3492பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தமது இருப்பிடங்களில் இருந்தும் வெளியேறியுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இடைவிடாது தொடர்ச்சியாக கனமழை பெய்தது. இதனால் வவுனியா மாவட்டம் தழுவிய ரீதியில் பெரும் இடர் நிலமை ஏற்றப் பட்டுள் ளது டன் பல கிரா மங்கள் முற் றாக வெள் ளத்தில் மூழ் கின. இதே வேளை, வெள்ளப் பாதிப்பினால் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 140 குடும்பங்களைச் சேர்ந்த 490 பேர் பாதிக்கப் பட்டுள்ள துடன், வவு னியா பிரதேச செயலாளர் பிரிவில் 746 குடும்பங்க ளைச் சேர்ந்த 2568 பேரும் செட்டிக் குளம் பிரிவில் 148 குடும்பங்களைச் சேர்ந்த 495 பேரும் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செய லாளர் பிரி வில் 14 குடும்பங் களைச் சேர்ந்த 39 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 2709 பேர் அவர்களின் இருப்பிடங்களில் இருந்து வெளியேறி உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். 126 குடும்பங்களைச் சேர்ந்த 363 பேர் 11 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். வவுனியா வடக்கில் புளியங்குளம், வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் கல்மடு, ஈச்சங்குளம், பாலமோட்டை,

வவுனியா தெற்கு சிங்கள பிரிவில் அக்கோபுர, புதுவிளாங்குளம், செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் கந்தசாமிநகர், குருக்கள் புதுக் குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களே இடைத் தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வெள்ளப்பாதிப்பு காரணமாக செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் 67 வீடுகளும், சிங்கள பிரதேச செயலாளர் பிரிவில் 2 வீடுகளுமாக 69 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது அத்தோடு, அதிகரித்த மழைவீழ்ச்சி காரணமாக வவுனியா மாவட்டம் தழுவிய ரீதியில் 46 குளங்களில் பெரும் உடைவு ஏற்பட்டுள்ளது. 226 குளங்கள் சேதமடையக்கூடிய நிலையில் உள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது. அவற்றை சீரமைக்கின்ற பணிகளில் அதிகாரிகளின் ஆலோசனைகளின் பேரில் இராணுவத்தினர் மற்றும் விவசாயிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதிகரித்த மழை வீழ்ச்சியால் 50 வீதமான நெற் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அவற்றின் முழுமை யான பாதிப்பு தொடர்பாக எதிர்வரும் நாட்களின் பின்னரே கூறமுடியும் என அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 208.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி வவுனியாவில் பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (எ- 10)

# வவுனியா பொது மருத்துவமனையின் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆராய்வு

வவுனியா, நவ. 29

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனைக்கு பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் வருகை தந்தார்.

இதன்போது, மருத்துவமனையின் பணிப்பாளர் கு. சுகுணனை சந்தித்து மருத்துவமனையின் தேவைப்பாடுகள், நிலவும் பிரச்னைகள் மற்றும் மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட வேண்டிய எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடினார்.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம், வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சராக பணியாற்றிய போது வவுனியா மருத்துவமனையில் உருவாக்கிய நாள்பட்ட சிறுநீரக நோயாளர்களுக்கான இரத்த சுத்திகரிப்பு பிரிவு மற்றும் நெதர்லாந்து அரசின் நிதிப்பங்களிப்பின் ஊடாக அமைக்கப்பட்ட இருதய மற்றும் சிறுநீரக சிகிச்சைக்கான விசேட பிரிவுகள் ஆகியவற்றை பார்வையிட்டு அதன் மேலதிக தேவைப்பாடுகள் தொடர்பில் பணிப்பாளர் எஸ். சுகுணன் மற்றும் சிறுநீரக நோய்களுக்கான விசேட வைத்திய நிபுணர் எஸ். சசிகாந்த் ஆகியோரிடம் கேட்டறிந்து கொண்டார். (எ- 10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்சம், ஊழலற்ற நடவடிக்கை முதலீட்டாளர்களை ஈர்த்துள்ளது!

## அநுர அரசுக்கு ஆஸ்திரேலியா பாராட்டு

கொழும்பு, நவ. 29

**புதிய அரசாங்கத்தின் இலஞ்சம் மற்றும் ஊழலற்ற வேலைத்திட்டம் முதலீட்டாளர்களை ஈர்த்துள்ளதாக இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதுவர் போல் ஸ்டீவன் தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதுவர் போல் ஸ்டீவன் நேற்று முன் தினம், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். ஜனாதிபதி அலுவலகத்தில் குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது கருத்து தெரிவித்த ஆஸ்திரேலிய தூதுவர், இலஞ்சம் மற்றும் ஊழலற்ற பொறிமுறையை நாடு முழுவதிலும் ஸ்தாபிக்க அரசாங்கம் கொண்டுச் செல்லும் வேலைத்திட்டத்திற்கு எந்த நேரத்திலும் ஆதரவளிக்க தயாரென தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கு இடையிலான நெருக்கமான தொடர்புகளை மேலும் பலப்படுத்தி முன்னோக்கி கொண்டுச் செல்ல எதிர்பார்ப்பதாகவும் தூதுவர் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு, கடல் சார் அலுவல்கள், டிஜிற்றல் மயமாக்கம்,அரச துறை நவீனமயப்படுத்தல், தொழில் கல்வி, வலுசக்தி உள்ளிட்ட துறைகளில் ஆஸ்திரேலியாவின் தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ)

# எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, நவ. 29

நாட்டில் எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சமூக ஆரோக்கியம் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் வித்தியா குமாரிபேல் தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டில் கடந்த 2023 ஆண்டில் 694 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் 15 சதவீதமானோர் 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

இளைஞர்கள் மற்றும் யுவதிகள் எயிட்ஸ் நோயினால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கையில், எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்குக் கையடக்கத் தொலைபேசி மற்றும் தொழில்னுட்ப வளர்ச்சி மூலம் உருவாகும் புதிய உறவு முறைகள் அதிகம் தாக்கம் செலுத்தியுள்ளன-என்றார். (அ)

# பாராளுமன்றத்தை வலுப்படுத்தும் பொறுப்பு சபாநாயகரின் கைகளில்

## கர்தினால் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, நவ. 29

புதிய சபாநாயகர் பாராளுமன்றத்தை வலுப்படுத்த வேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதிய சபாநாயகரை சந்தித்தவேளை அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பலவீனமான நிலையில் பாராளுமன்றத்துக்கு புத்துயிர் அளிக்கும் பணி சபாநாயகர்



அசோக ரண்வலவின் கரங்களில் உள்ளது என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

# இஸ்ரேல்-லெபனான் போர்நிறுத்தம் வெளிவிவகார அமைச்சு வரவேற்பு!

கொழும்பு, நவ. 29

இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையில் அண்மையில் அறிவிக்கப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

போர் நிறுத்தம் லெபனான் மற்றும் பிராந்தியத்தில் நீடித்த அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு வழி வகுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம் என்றும் வெளிவிவகார அமைச்சு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

(அ)

# புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்த நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்தவேண்டும்

## அரசிடம் கோருகிறார் சரத் வீரசேகர

கொழும்பு, நவ. 29

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு வெளிப்படையாக குறிப்பிட வேண்டும். தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒன்றை குறிப்பிட்டு விட்டு நடைமுறையில் பிறிதொன்றை செயற்படுத்துவது முறையற்றது என பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் குறை, நிறைகளை, இரண்டு மாத காலத்துக்குள் மதிப்பிட முடியாது.

அரசாங்கத்துக்கு உரிய கால வகாசம் வழங்கவேண்டும். நாட்டு மக்கள் புதிய மாற்றத்தை எதிர்பார்த்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். மக்கள் எதிர்பார்க்கும் மாற்றம் நிறைவேற வேண்டும்.

நாட்டின் ஒற்றையாட்சி, மற்றும் தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களில் அவதானத்துடன் செயற்படுவோம். ஏனெனில் நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாப்பதற்கு நாங்கள் ஆயுதமேந்தி போராடினோம். நாட்டுக்காக உயிர் நீத்த இராணுவ படைகளின் தியாகத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஜனாதிபதி இரட்டை நிலைப்பாட்டை பின்பற்றுகிறார்.2015 முதல் 2019 வரை ஆட்சியில் இருந்த நல்லாட்சி அரசாங்கம் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்காக முன்னெடுத்த பணிகளை நிறைவுபடுத்துவதாக ஜனாதிபதி அநுரகுமார தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் லால் விஜயநாயக்க தலைமையிலான குழுவினர் சமர்ப்பித்த புதிய அரசியலமைப்பு உருவாக்க வரைவு சமஷ்டியாட்சி உருவாக்கத்தை பரிந்துரைத்துள்ளது.

சமஷ்டியாட்சி அரசியலமைப்பின் அம்சங்களுடன் புதிய அரசியலமைப்பை உருவாக்கினால் ஒற்றையாட்சியாப்பு இயல்பாகவே இரத்தாகும்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒன்றை குறிப்பிட்டு விட்டு, நடைமுறையில் பிறிதொன்றை செயற்படுத்துவது முறையற்றது. தேசியத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது-என்றார்.

(அ)

# புதிய அரசாங்கம் ரணிலின் பாதையிலேயே செல்கிறது!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 29

அரசாங்கம் மக்களின் ஆணையைப் புறக்கணித்து, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வகுத்த பாதையில் செல்வதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பிரேமதாஸ, பொது மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் கூடிய புதிய திட்டம் வாக்குறுதியளிக்கப்பட்ட போதிலும், அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைகளுக்கு அடிபணிந்து, குடிமக்களுக்கு உறுதியான நிவாரணங்களை வழங்கத் தவறிவிட்டது.

தேர்தல் பிரசார வாக்குறுதிகளுக்கும் அரசாங்க நடவடிக்கைகளுக்கும் இடையில் முரண்பாடுகள் உள்ளன. மின்சார கட்டணம் மற்றும் எரிபொருள் விலை குறைப்பு வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்புக்குள் பணிபுரிவதை எனது கட்சி ஆதரிக்கும் அதே வேளையில், பொது மக்களின் சுமையை குறைக்கும் வகையில் வரி கட்டமைப்புகளை சீர்திருத்துவதில் நாம் உறுதியாக உள்ளோம்.

அரசின் செயற்பாடுகளில் வெளிப்படைத் தன்மையின்மை காணப்படுகிறது. அர்த்தமுள்ள சீர்திருத்தங்களை நடைமுறைப் படுத்துவதில் அரசாங்கத்தின் இயலாமை வெளிப்படுகிறது-என்றார்.

(அ)

தரமற்ற மருந்தை கொள்வனவு:

# 4 முன்னாள் அமைச்சர்கள் சி.ஐ.டியிடம் வாக்குமூலம்!

க்லொழும்பு, நவ. 29

அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராக பதவி வகித்த காலத்தில், தரமற்ற மருந்தை கொள்வனவு செய்து வைத்தியசாலைகளுக்கு விநியோகித்துள்ளமை சம்பந்தமாக நான்கு முன்னாள் அமைச்சர்கள் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தில் நேற்று முன் தினம் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்துக்கு நேற்று முன் தினம் அழைக்கப்பட்டவர்க [illegible] முன்னாள் அமைச்சர்க [illegible] விதுர விக்ரமநாயக்க, விஜேதாச ராஜபக்ஷ, நசீர் அஹமட் ஆகியோரும் உள்ளடங்குகின்றனர்.

இதற்கு முன்னரும் முன்னாள் அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, ஹரீன் பெர்னாண்டோ, ரொஷான் ரணசிங்க, ரமேஷ் பத்திரன ஆகியோரும் மேற்படி சம்பவம் தொடர்பில் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

தரமற்ற மருந்தை கொள்வனவு செய்து, நாட்டிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்கு விநியோகித்த சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட 18 பேரிடம் வாக்குமூலங்களை பெற்றுக் கொள்ளுமாறு மாளிகாகந்த நீதவான் லோச்சனி அபேவிக்ரம உத்தரவு பிறப்பித்திருந்தார்.

குற்றப்பு லனாய்வு திணைக்களத்தின் வேண்டுகோளை பரிசீலித்த பின்னரே, அவர் முன்னாள் அமைச்சர்களுக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

(அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 4, 800 ஏக்கர் விவசாய நிலங்கள் வெள்ளத்தினால் முற்றாக சேதம்!

## விவசாய பிரதி அமைச்சர் தகவல்

**கொழும்பு, நவ. 29**

**நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக சுமார் 4, 800 ஏக்கர் விவசாய நிலங்கள் சேதமடைந்துள்ளதாக விவசாய மற்றும் கால்நடை வள பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார். கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

இதன் காரணமாக 2, 000 மேற்பட்ட விவசாயிகள் பாதிப படைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அதேநேரம் சுமார் 3, 900 ஏக்கருக்கும் அதிக விவசாய நிலப்பரப்புகளுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடிய சாத்தியம் நிலவுகிறது.

குறித்த விவசாய நிலங்களும் பாதிக்கப்பட்டால், சுமார் 3, 200க்கும் அதிகமான விவசாயிகளும் பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும்.

அத்துடன் சிறிய அளவிலான விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்-என்றார். (அ)

# நுவரெலியாவில் மண் சரிவு!

கொழும்பு, நவ. 29

நிலவும் சீரற்ற காலநிலையால் நுவரெலியா - கண்டி பிரதான வீதியின் லபுக்கலை குடாஓயா பகுதியில் நேற்று முன் தினம் இரவு மண்மேட்டுடன் கற்கள் சரிந்து வீழ்ந்ததில் குறித்த வீதியில் போக்குவரத்து ஒரு வழியாக மட்டுப்படுத்தப்பட்டது.

மண்மேட்டுடன் கற்கள் சரிந்து வீழ்ந்ததில் நுவரெலியா, கண்டி, கொழும்பு வழியூடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் நீண்ட நேர சிரமத்தின் பின்னர் நுவரெலியா போக்குவரத்து பொலிஸார், நுவரெலியா வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இணைந்து மண்மேட்டையும் கற்களையும் அகற்றி இவ்வீதியின் போக்குவரத்தை வழமைக்குக் கொண்டு வந்தனர்.

எவ்வாறாயினும் தற்போது குறித்த வீதியின் ஒரு மருங்கில் மாத்திரம் போக்குவரத்து இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நுவரெலியா கண்டி பிரதான வீதியில் பல இடங்களில் தொடர்ந்து மண் சரிவு ஏற்படுவதற்கான வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதால் இவ் வீதியில் பயணிக்கும் வாகன சாரதிகள் மற்றும் பாதசாரிகள் மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

(அ)

# குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று பந்துல குணவர்தன முன்னிலை

கொழும்பு, நவ. 29

தனது வாழ்க்கையில் முதல் முறையாக அமைச்சரவை தீர்மானங்கள் தொடர்பில் குற்றப புலனாய்வுத் திணைக்களத்திற்கு விசாரணைக்காக வருகை தந்துள்ளதாக முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

சந்தேகத்திற்குரிய மருந்துப் பொருள் கொள்வனவு தொடர்பான விசாரணைக்கு நேற்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகிய போதே அவர் இதனை கூறினார்.

கடந்த அரசாங்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட சந்தேகத்திற்குரிய மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்தமை தொடர்பான விசாரணைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில், கடந்த அரசாங்கத்தின் அமைச்சரவை தீர்மானங்களுக்கு எதிராக தற்போது விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

இதன்படி கடந்த சில நாட்களாக, கடந்த அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்திய பல அமைச்சரவை அமைச்சர்கள், வாக்குமூலங்களை வழங்குவதற்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை எவ்வாறு நிறைவேற்றப்போகிறது அரசு?

## முன்னாள் எம்.பி சரித ஹேரத் கேள்வி

கொழும்பு, நவ. 29

அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை எவ்வாறு நிறைவேற்றப் போகின்றது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசாங்கம் புதிய முறையில் செயற்படப்போவதாக வாக்குறுதிகளை வழங்கியது. மக்கள் ஆணைக்கு புறம்பான செயற்பாட்டை அரசாங்கத்தினால் மேற்கொள்ள முடியாது. இத்தகைய பின்னணியில் இந்த அரசாங்கம் தேர்தல் மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் என்ற நம்பிக்கையில் நாம் இருந்தோம். ஆயினும். மக்கள் ஆணைக்காக வழங்கப்பட்ட உறுதிமொழிகளுக்கு புறம்பாக அரசங்கம் சில செயற்பாடுகளை மேற்கொள்கின்றமையையே அவதானிக்க கூடியதாகவுள்ளது.

பொருளாதார பிரச்னையும் கூட இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வர காரணமாக அமைந்தது. மக்கள் எழுச்சிக்கு காணமாக அமைந்த பொருளாதார நெருக்கடியே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வர காரணமாக அமைந்தது. ஆனால் வாக்குறுதிகளில் கூறியமையை போன்று புதிய பொருளாதார மாற்றத்தை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததாக தெரியவில்லை.

முன்னைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதித்துடன் உடன்பட்ட விடயங்களுடனேயே இந்த அரசாங்கத்திற்கும் பயணிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே 2025 பொருளாதார நகர்வுகள் முன்னாள் ஜனாதிபதி ரணிலின் பொருளாதாரம் தொடர்பில் நாணய நிதியத்துடன் உடன்பட்ட விடயங்களுக்கு அமையவே செயற்பட வேண்டிய நிலை காணப்படுகின்றது. இத்தகைய நிலையில் அரசாங்கம் உடன்பட்ட பல விடயங்களை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும். அதனை அரசாங்கம் எவ்வாறு நிறைவேற்றப் போகின்றது எனவினவ விரும்பகின்றோம்-என்றார். (அ)

# மரம் முறிந்து விழுந்து இளைஞன் உயிரிழப்பு!

## முனுகுலவில் சோகம்

கொழும்பு, நவ. 29

நமுனுகுல பகுதியில் மரம் ஒன்று முறிந்து விழுந்து நபரொருவர் உயிரிழந்துள்ளதாக நமுனுகுலை பொலிஸார் தெரிவித்தனர்.

29 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த நபர் தனது வீட்டுக்கு பின்புறத்தில் உள்ள மரத்தை வெட்டியவேளை, அது குறித்த நபரின் மேல் விழுந்தமையால் படுகாயம் அடைந்த நிலையில் பல்லகெடுவ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக நமுனுகுல பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் தற்போது பல்லகெடுவ வைத்தியசாலை யில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை நமுனுகுலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# எம்.பிக்களின் சிறப்புரிமைகளை வரையறுக்கும் சட்டம் சமர்ப்பிப்பு

கொழும்பு, நவ. 29

பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிடைகளை வரையறுக்கும் வகையிலான உத்தேச சட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தனி நபர் சட்டப் பிரேரணையாக இந்த வரைவுச் சட்ட மூலம் ஐக்கிய மக்கள் சக்தி இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகேயினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களது கொள்கைகளுக்கு அமைவாக இந்த உத்தேச சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தற்பொழுது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு சிறப்புரிமைகளை ரத்து செய்யக்கூடிய வகையில் புதிய சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

பத்தாம் பாராளுமன்றின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் பிரேரணையாக இந்த உத்தேச சட்ட மூலம் குறித்து விவாதம் நடத்தப்படலாம் என ஹேஷா விதானகே தெரிவித்தார்.

இந்த உத்தேச சட்ட மூலம் தேர்தல் மேடைகளில் தேசிய மக்கள் சக்தி கூறிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (அ)

# பொலிஸ் இணையத்தளத்தில் மாற்றம்

கொழும்பு, நவ. 29

பொதுமக்களுக்கு உதவுவதற்கான முக்கிய அம்சங்களை அணுகக்கூடிய வகையில் இலங்கை பொலிஸ் தனது உத்தியோகபூர்வ இணையத்தளத்தை புதுப்பித்துள்ளது.

புதுப்பிக்கப்பட்ட இணையத்தளம் நேற்று முன் தினம் பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பொலிஸ் நடவடிக்கைகளின் உத்தியோகபூர்வ புதுப்பிப்புகளைப் பகிர்வதைத் தவிர, இந்த இணையத்தளம் பொதுமக்கள் முறைப்பாடுகளைத் தாக்கல் செய்யவும், பொலிஸ் அனுமதிப் பதிவுகளுக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவும் அனுமதிக்கும்.

புதிய இணையத்தளத்தில் ஏனைய அம்சங்களையும் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை பொலிஸ் தெரிவித்துள்ளது.

(அ)

# இலங்கையின் டீசல் இறக்குமதி ஒப்பந்தத்தை சிங்கப்பூர் நிறுவனத்துக்கு வழங்க அனுமதி!

கொழும்பு, நவ. 29

சிங்கப்பூரின் பிபி எனர்ஜி நிறுவனத்திற்கு எதிர்வரும் டிசெம்பர் 15ஆம் திகதி முதல் 6 மாதங்களுக்கு இலங்கைக்கான டீசல் வழங்குவதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்தின் பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்ட விலைமனுக்களைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் டிசெம்பர் 15 ஆம் திகதி முதல் அடுத்த வருடம் ஜூன் மாதம் 14ஆம் திகதி வரையிலான 6 மாத காலத்திற்கு 4 கப்பல் டீசல் தொகையை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தத்திற்காகச் சிங்கப்பூரின் பிபி எனர்ஜி நிறுவனம் விலை மனுவைச் சமர்ப்பித்தது.

அமைச்சரவையால் நியமிககப்பட்ட விசேட கொள்முதல் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் குறித்த ஒப்பந்தத்தை அந்த நிறுவனத்துக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேந்தலுக்கு அரசின் அனுமதி; நல்லிணக்க எதிர்பார்ப்பு வலுவாகும்

## மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்

கொழும்பு, நவ. 29

**புதிய அரசாங்கம் நினைவேந்தலுக்கான உரிமைக்கு இடமளித் திருப்பது நல்லிணக்கச் செயற்பாட்டின் எதிர்காலம் குறித்து சமூ கங்களுக்கிடையிலான எதிர்பார்ப்புக்களை வலுவடையச் செய்துள் ளது என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள் ளது.**

இது குறித்து அந்த நிலையம் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை கடந்த தசாப்தங் களில் பல்வேறு சமூகங்கள் தங்கள் அன்புக்குரியவர்களை இழக்க வழிவகுத்த மோதல் களை சந்தித்துள்ளது. இருப்பி னும், தங்களது அன்புக்குரிய வர்களை நினைவு கூரும் உரி மையானது பலருக்கும் மறுக் கப்பட்டுள்ளது.

அர்த்தமுள்ள நல்லிணக்கச் செயல்முறைகளில் நினைவு கூரும் உரிமைக்கான உத்தர வாதம் அவசியமானதாகும். தற்போதைய புதிய அரசாங்கம் அவ்வாறான நினைவேந்தலுக் கான உரிமைக்கு இடமளித் திருப்பதானது நல்லிணக்கச் செயற்பாட்டின் எதிர்காலம் குறித்து சமூகங்களுக்கிடையி லான எதிர்பார்ப்புக்களை வலு வடையச் செய்துள்ளது - என்று கூறியுள்ளது. (அ)

# 14 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, நவ. 29

சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 14 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் சந்தேக நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று வியாழக்கிழமை கைது செய் யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந் தேக நபர் நீர்கொழும்பு தலு பொத்த பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபர் மலேசியாவி லிருந்து நேற்று அதிகாலை 12.30 மணியளவில் கட்டு நாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இதன்போது, விமான நிலைய அதிகாரிகளால் மேற் கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதியில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 275 வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து, கைது செய் யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டு நாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டார். (அ)

# நிவாரணம் வழங்குவதற்கு 11 கடற்படைக் குழுக்கள்!

கொழும்பு, நவ. 29

வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட மக்களுக்கான நிவார ணங்களை வழங்குவதற்காக கடற்படையின் 11 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் மாத்தறை மாவட்டங் களில் கடற்படையின் நிவார ணக் குழுக்கள் கடமைகளில் ஈடுபட்டுள்ளன.

இதனிடையே, வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்காக விமானப் படை யின் 50 பேர் 06 இடங்களில் 6 ஹெலிகொப்டர்களுடன் நிறுத் தப்பட்டுள்ளதாக விமானப் படை தெரிவித்துள்ளது. (அ)

# இலங்கை-சீன சட்டவாக்க நிறுவனங்களின் உறவுகளை மேலும் வலுப்படுத்தவேண்டும்!

## சீன தூதுவர் சபாநாயகரிடம் வலியுறுத்தல்

கொழும்பு, நவ.

இலங்கை - சீன சட்டவாக்க நிறுவனங்களின் உறவுகளை மேலும் வலுப்படுத்துவதுடன் புதிய பாராளுமன்றத்திலும் இலங்கை - சீன பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை ஸ்தாபிக்க எதிர்பார்ப் பதாக சீன தூதுவர் சபாநாயகர் அசோக ரன்வலவி டம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூது வர் கீ சென்ஹொங்கிற்கும், சபா நாயகர் கலாநிதி அசோக ரன்வ லவுக்கும் இடையிலான சந் திப்பு பாராளுமன்றத்தில் இடம் பெற்றது.

சீன தேசிய மக்கள் காங்கிர சின் நிலைக்குழுவின் தலைவர் (சீன பாராளுமன்ற சபாநாயகர்) ஸாவோ லெஜியின் வாழ்த்துக் களை சீன தூதுவர் சபாநாயக ரிடம் தெரிவித்தார்.

இரு தரப்பினருக்கும் இடை யில் கலந்துரையாடல் இடம் பெற்றதுடன், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீண்ட கால ஒத்துழைப்புக் களை நினைவு கூர்ந்த புதிய சபாநாயகர், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தலை மையிலான புதிய அரசாங்கத்தி லும் இரு நாடுகளுக்கும் இடை யிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு எதிர்பார்ப் பதாகத் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரி வித்த சீனத் தூதுவர், இரு நாடு களின் சட்டவாக்க நிறுவங்க ளின் உறவுகளை மேலும் வலுப் படுத்த வேண்டும் எனவும், புதிய பாராளுமன்றத்திலும் இலங்கை - சீன பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை ஸ்தாபிக்க எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

# அதிகளவில் உயிரை மாய்க்கும் போதைப்பொருள் பாவிப்போர்!

கொழும்பு, நவ. 29

நாட்டில் அதிகளவில் உயிரை மாய்த்துக்கொள்பவர்கள் ஐஸ் மற்றும் மெத்தம்பெட்டமைன் போதைப்பொருளுக்கு அடிமை யானவர்கள் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த மூன்று மாதங்களில் கம்பஹா மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் 10 பேர் உயிரை மாய்த்துக் கொண்டு உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் 16 மற்றும் 65 வயதிற்கு இடைப் பட்டவர்கள் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

இவர்களில் 4 பேர் போதைப் பொருளுக்கு அடிமையா னவர்கள் எனத் தெரியவந்துள் ளது.

மெத்தம்பெட்டமைன் போதைப்பொருள் பயன் பாடானது உடல் ஆற்றலை அதிகரிப்பதுடன், குழப்பம், பதற்றம், விரைவான இதயத் துடிப்பு உள்ளிட்ட உடல் நலப்பாதிப்புகளை ஏற்படுத்துவ தாக சுகாதாரத்துறையினர் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், தூக்கமின்மை, நினைவாற்றல் இழப்பு உள் ளிட்ட உடல் நலப்பிரச்னை களை ஏற்படுத்துகின்றமையால் இவ்வாறு உயிரை மாய்த்துக் கொள்ளும் சம்பவங்கள் பதி வாகியுள்ளன. (அ)

# 7 ஈரானியர்களுக்கு ஆயுள் தண்டனை!

கொழும்பு, நவ. 29

2019 ஆம் ஆண்டு கொழும்பு மட்டக்குளி கரையோரப் பகுதி யில் 425 கிலோவுக்கும் அதிக மான ஹெரோயின் போதைப் பொருளை கடத்திய குற்றச்சாட் டில் குற்றத்தை ஒப்புக்கொண்ட 07 ஈரானிய பிரஜைகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள் ளது

பிரதிவாதிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.எஸ்.எஸ்.சபுவிட இந்தத் தீர்ப்பை வழங்கியுள் ளார்

2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி, கொழும்பு மட்டக்குளிக்கு அருகிலுள்ள கடற்கரையில் 425 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருளைக் கொண்டு செல்லும்போது பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

இதன்படி, சட்டமா அதிபர், பிரதிவாதிகளுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் உயர் குற்றச்சாட்டுகளை தாக் கல் செய்தார்.

இந்த வழக்கு நேற்று விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட போதே, பிரதிவாதிகள் தமது சட்டத்தரணி ஊடாக இது தொடர்பான குற்றச் சாட்டை ஒப்புக்கொள்வதாக நீதிமன்றில் அறிவித்த நிலையில் இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட் டுள்ளது. (அ)

# அநுராதபுரத்தில் மின்சாரம் தாக்கி 2 பிள்ளைகளின் தாய் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 29

அநுராதபுரம், கல்கிரியாகம பிரதேசத் தில் நேற்று முன் தினம் புதன்கிழமை மின்சாரம் தாக்கி இரண்டு பிள்ளைகளின் தாய் உயிரிழந்துள்ளதாக கல்கிரியாகம பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிரியாகம , புப்போகம பிரதேசத் தைச் சேர்ந்த 31 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரே உயிரி ழந்துள்ளார்.

இவர் தனது வீட்டில் அறுந்து கிடந்த மின்சாரக் கம்பியில் சிக்கி மின்சாரம் தாக்கி காயமடைந்துள்ள நிலையில் தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# அர்ச்சுனாவின் பிடியாணை இரத்து

கொழும்பு, நவ. 29

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு பிறப்பிக்கப்பட்டிருந்த பிடியாணையை மீளப்பெறுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, தனது சட்டத்தரணி ஊடாக நேற்று நீதி மன்றில் முன்னிலையான நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - பேஸ்லைன் வீதியில் அர்ச் சுனா, கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் திகதி இன்னுமொரு காருடன் மோதி விபத்தை ஏற்படுத்தியதுடன், வாகன சாரதியைத் தாக்கிக் கடுமையாகக் காயப் படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு கடந்த 26ஆம் திகதி விசாரணைக்கு எடுத் துக் கொள்ளப்பட்டது.

சந்தேகத்திற்குரிய பாராளுமன்ற உறுப் பினர் இராமநாதன் அர்ச்சுனா தொடர்ந் தும் வழக்கு விசாரணைகளில் முன்னிலை யாவதைத் தவிர்த்து வருவதனால் அவருக் குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் அர்ச்சனாவுக்குப் பிறப் பிக்கப்பட்ட பிடியாணையை மீளப்பெறு மாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவியந்திரம் வெள்ளத்தில் மூழ்கிய விபத்தில் சிக்கி 7 பேர் உயிரிழப்பு!

## நாள்தோறும் மீட்கப்படும் சடலங்களால் மக்கள் அச்சம்

காரைதீவு, நவ. 29

**காரைதீவு மாவடிப்பள்ளி பகுதியில் உழவியந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதில் காணாமல் போனவர்களில் இதுவரை 7 சடலங்கள் மீட்கப்பட்டன.**



காரைதீவு - மாவடிப்பள்ளி பகுதியில் உழவியந்திரத்தில் வீடு திரும்பிக்கொண்டிருந்த மத்ரஸா மாணவர்கள் உள்ளிட்ட பலர் வெள்ளத்தில் சிக்கி காணாமல் போகியிருந்த நிலையில் தேடுதல் நடவடிக்கையின் போது 5 மாணவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்றுக்காலையும் தொடர்ந்தும் மூன்றாவது நாளாக தேடுதல் பணி முன்னெடுக்கப்பட்டது. இதன் போது 2 சடலங்கள் மீட்கப்பட்டன. இதனால் குறித்த விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 7 ஆக அதி கரித்தது.

மத்ரஸா முடிந்து மாணவர்களும் உழவியந்திர சாரதி மற்றும் உதவியாளரும் பயணித்துக் கொண்டிருந்த போது உழவியந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு இந்த விபத்து இடம்பெற்றது.

மீட்புப் பணியின் போது விலையுயர்ந்த மோட்டார் சைக்கிள்கள் இரண்டும், உழவியந்திரமும் மீட்கப்பட்டதுடன், இதில் பயணித்தவர்கள் எத்தனை பேர், எத்தனை பேர் காணாமல் போனார்கள் என்பதை துல்லியமாக கூற முடியாத நிலை உள்ளதாகவும், குறைந்தது இன்னும் 02 பேராவது வெள்ளத்தில் அள்ளுண்டு சென்றிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் குறித்து ஆய்வு



சாய்ந்தமருது, நவ. 29

சாய்ந்தமருதில் வெள்ள அனர்த்தத்தால் வீடுகள் பாதிக்கப்பட்டு பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீன் தலைமையிலான குழுவினர் பார்வையிட்டனர்.

பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு சுகாதாரமான உணவு கிடைப்பதையும் அவர்களின் பொதுச்சுகாதா ரத்தை உறுதிப்படுத்தி மருத்துவ வசதிகளை செய்து கொடுப்பதற்கும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. இதன்போது, பொதுச் சுகாதார பரிசோதகர்களும், பொதுச் சுகாதார மாதுக்களுக்கும் ஆலோசனைகள் வழங்கப் பட்டன. போசாக்கு உணவுகளை வழங்கி வைப்பது தொடர்பிலும் அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டன.

இந்தக் குழுவினரால் மருதமுனை மருத் துவமனை பார்வையிடப்பட் டதுடன் நடமாடும் மருத்துவ முகாமை உடன் தொடங்குவ தற்கும் அறிவுறுத்தல் வழங்கப் பட்டது. வெள்ளத்தால் மருத முனை மருத்துவமனை வளா கமும் கட்டடங்களும் பாதிக் கப்பட்ட போதும் உத்தியோ கத்தர்களும் ஊழியர்களும் மருத்துவ உபகரணங்களை பாதுகாப்பாக மீட்டெடுத்தனர். (எ)

*பாரிய நீர்க்குழாய் வெள்ளத்தில் அள்ளுண்டது!*

# காரைதீவு, நிந்தவூர் பிரதேசங்களுக்கு குழாய் நீர் விநியோகம் தடைப்பட்டது

காரைதீவு, நவ. 29

அம்பாறை மாவட்ட கரையோரத்தின் சில பகுதிகளில் குழாய் நீர் விநியோகம் கடந்த இரண்டு நாட்களா கதடைப் பட்டுள்ளது.

அம்பாறையில் இருந்து நிந்தவூர் பிரதான நீர்த்தாங்கிக்கு நீரை எடுத்து வருகின்ற பாரிய குழாய் உடைந்திருப்பதன் காரணமாக இந்த நீர்த் தடை ஏற்பட்டுள்ளது.

450 மில்லி மீற்றர் விட்டம் உள்ள இப் பாரிய குழாய் பெரு வெள்ளத்தில் அள்ளுண்டதனால் இத்திடீர்த் தடை ஏற்பட்டுள்ளது.

சம்மாந்துறை பிரதேசத்தின் நயினாகாட்டையை அடுத்துள்ள சுரிப்போடு முந்தல் என்ற பிரதேசத்தில் உள்ள பாரிய குழாயில் இவ் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால், நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களுக்கான குழாய்நீர் விநியோகம் முற்றாகத் தடைப் பட்டுள்ளது.

இதேவேளை, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர்ஜ. எல். கைதர் அலி, பொது மக்களுக்கு அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை காரணமாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள நீர் வழங்கல் சபையின் அலுவலகங்கள் மற்றும் குடிநீர் வழங்கும் நிலையங்கள் போன்றன வெள்ளத்தால் நிரம்பியுள்ளதாலும் நீர் வழங்கல் குழாய்கள் செல்லும் பாதைகள் நீரினால் பாதிக்கப் பட்டுள்ளதாலும் எந்த நேரத்திலும் நீர் வழங்கலில் தடங்கல் ஏற்படலாம்.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டு பாவனையாளர்கள் தங்களுக்குத் தேவையான நீரை சேமித்து பாவிக்குமாறும் ஏதாவது இடையூறுகள் ஏற்படுமாயின் அவை தொடர்பில் நீர்ப்பாவனையாளர்களுக்கு அறிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்- என்றார். (எ)

# மாணவர்கள் 13 பேர் உட்பட 15 பேர் விபத்தில் சிக்கினர்

## மத்ரஸா நிர்வாகம் விளக்கம்

கல்முனை, நவ. 29

அம்பாறை மாவட்டம் - மாவடிப் பள்ளியில் வெள்ளத்தில் உழவியந்திரம் கவிழ்ந்த சம்பவத்தில் உழவியந்திர சாரதி மற்றும் உதவியாளர், மத்ரஸா மாணவர்கள் 13 பேர் வெள்ளத்தில் சிக்கி காணாமல் போயிருந்த சம்பவம் தொடர்பில் நிந்தவூர் காசிபுல் உலூம் அரபுக் கல்லூரி நிர்வாகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

எங்களுடைய மத்ரஸா நிர்வாகமும் அதிபர் உட்பட அனைவரும் தீர்மானித்ததற்கு அமைய, அனர்த்தம் ஒன்று ஏற்படுகின்ற பட்சத்தில் மாணவர்கள் பாதுகாப்பாக இருக்கக் கூடிய போதிய வசதிகள் எமது மத்ரஸாவில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இதனால் அவர்களை அங்கு தொடர்ந்து வைத்திருந்து பராமரிப்பது என முடிவு செய்திருந்தோம். ஆனால், அதன்பிறகு ஏற்பட்ட பலத்த காற்றுடன் கூடிய மழை காரணமாக எமது காசிபுல் உலூம் அரபுக் கல்லூரியினுடைய மாணவர் விடுதி, வகுப்பறைகள், தொழுகை அறைகள் என்பன மழை நீரினால் முற்றாக பாதிக்கப்பட்டிருந்தது. இதனால் இரண்டு மாணவர்கள் இந்த நிலைமையால் விபத்தை அங்கு சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. மலசலகூட குழிகள் கூட நிரம்பி காணப்பட்டன. இப்படி அடிப்படை வசதிகளை கூட மாணவர்களுக்கு வழங்க முடியாத நிலை ஏற்பட்டதனால் மீண்டும் நாங்கள் எங்களுடைய பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் கூடி முடிவெடுத்தோம், மாணவர்களை பாதுகாக்கின்ற அடிப்படையில் கல்லூரிக்கு விடுமுறை வழங்கி மாணவர்களை அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற முடிவை எடுத்தோம். இதற்காக பிரத்தியேகமாக ஒரு பேருந்தை வாடகைக்கு அமர்த்தி மாணவர்களை கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளை செய்தோம். ஆனால், சம்மாந்துறைக்கு மாணவர்களை ஏற்றிக் கொண்டு சென்றபோது காரைதீவில் இருந்த பாதுகாப்புத் தரப்பினர் பேருந்து செல்ல முடியாது என்றும் உழவியந்திரத்தின் ஊடாக போக்குவரத்து செய்யப்படுகின்றது என்றும் கூறியதன் விளைவாக நாங்கள் அதிலே அனுப்ப சம்மதித்தோம். இதனை மாணவர்களுடைய பெற்றோர்களுக்கும் அறிவித்து அவர்கள் மறுமுனையில் நிற்கிறோம். நீங்கள் அனுப்புங்கள் என்று கூறியதன் பிற்பாடுதான் நாங்கள் மாணவர்களை உழவியந்திரத்தில் அனுப்பினோம். ஆனால், அந்த உழவியந்திரம் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது. இதுவே உண்மை நிலைமையாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஆதம்பாவா எம். பி. தலைமையில் அனர்த்த ஒருங்கிணைப்பு கூட்டம்

கல்முனை, நவ. 29

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கல்முனை, மற்றும் கல்முனை வடக்கு ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட அனர்த்த கட்டுப்பாடு மற்றும் மீட்பு முகாமைத்துவ ஒருங்கிணைப்பு கூட்டம் கல்முனை மாநகர சபை கூட்ட மண்பத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர ஆணையாளர் என். எம். நௌபீஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா கலந்து கொண்டு அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கை தொடர்பான முன்னேற்ற மற்றும் மீளாய்வு விடயங்கள் குறித்து கலந்துரையாடினார்.

இதன்போது மழை மற்றும் வெள்ளம் காரணமாக கல்முனை மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகளை துரிதப்படுத்தல், இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கல், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கை பற்றிய மீளாய்வு, அனர்த்த நிலை அதிகரிக்குமிடத்து பாதிப்புகளை குறைப்பதற்கான முன்னேற்பாடுகள் மற்றும் ஆலோசனைகள், எதிர்கால திட்டமிடல்கள் குறித்து இங்கு கலந்தாலோசிக்கப்பட்டது. (எ)

# பள்ளிவாசலால் மக்களுக்கு உதவி

அட்டாளைச்சேனை, நவ. 29

கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக பெய்த அடைமழை காரணமாக அட்டாளைச்சேனை பிரதேசத்தின் சில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. குறித்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் இடம் பெயர்ந்து பொது இடங்களிலும் உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

குறித்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமைத்த உணவை வழங்கும் வேலைத்திட்டமொன்றை அட்டாளைச்சேனை பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் முன்னெடுத்துள்ளது.

தனவந்தர்களின் உதவியுடன் அட்டாளைச்சேனை பெரிய ஜும்ஆ பள்ளிவாசலால் சமைக்கப்படும் இந்த உணவானது பிரதேச செயலாளரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கிராம உத்தியோகத்தர்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக பள்ளிவாசல் தலைவர் ஏ. எல். அனீஸ் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரேல் - ஹிஸ்புல்லா போர் நிறுத்தம்

# விவரிக்க முடியாத மகிழ்ச்சியுடன் வீடு திரும்பும் லெபனான் மக்கள்!



பெய்ரூட், நவ. 29

**இஸ்ரேல் - ஹிஸ்புல்லா இடையே ஏற்படுத்தப்பட்டுள்ள போர் நிறுத்தம் காரணமாக தெற்கு லெபனான் மக்கள் தங்கள் வீடுகளுக்கு மகிழ்ச்சியுடன் திரும்பி வருகின்றனர்.**

போர் நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் அதிகாலையில் இருந்து மக்கள், தெற்கில் உள்ள தங்கள் கிராமங்களுக்குத் திரும்பி வருகின்றனர். இது தொடர்பான படங்களும், வீடியோக்களும் வைரலாகி வருகின்றன. "நாங்கள் என்ன நினைக்கிறோம் என்பதை எங்களாலே விவரிக்க முடியவில்லை. மக்கள் வெற்றி பெற்றனர்" என்று பொது மகன் ஒருவர் தெரிவித்தார்.

இஸ்ரேல் - ஹிஸ்புல்லா இடையிலான போர் நிறுத்தத்தை ஈரான் உட்பட பல்வேறு நாடுகள் வரவேற்றுள்ளன.

இந்திய வெளிவிவகார அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், "இஸ்ரேல் மற்றும் லெபனான் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளதை வரவேற்கிறோம். பதற்றத்தை தணிக்கவும், கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளவும் பேச்சுகள் மற்றும் இராஜதந்திர பாதைக்கு திரும்பவும் நாங்கள் தொடர்ந்து அழைப்பு விடுத்து வந்தோம். இந்த முன்னேற்றம், இந்தப் பரந்த பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு வழி வகுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்"என்று குறிப்பிட்டுள்ளது.

காஸாவிலும் விரைவில் போர் நிறுத்தம் ஏற்படும் என்று பலஸ்தீனர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். இது குறித்து சீனா, "பதற்றங்களைத் தணிப்பதற்கும், அமைதியை உறுதிப்படுத்தவும் நாங்கள் ஆதரவளிப்போம்" எனத் தெரிவித்துள்ளது. ஈரான் பாராளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் கலிபாப் கூறுகையில், "லெபனானில் ஏற்படுத்தப்பட்டுள்ள போர் நிறுத்தத்தை நாங்கள் வரவேற்கிறோம். இஸ்ரேல் ஆட்சியின் அடக்குமுறை முடிவடைந்துள்ளது. இனி அங்குள்ள மக்கள் அமைதியை உணர்வார்கள்" என்கிறார். (எ)

# ஒப்பந்தத்தை மீறினால் தாக்குதல் நடத்துவோம்

## எச்சரிக்கை விடுத்த நெதன்யாகு

டெல் அவிவ், நவ. 29

ஹிஸ்புல்லா போராளிகள் போர் நிறுத்த ஒப்பந்த மீறலில் ஈடுபட்டாலோ, ஆயுதங்களை கையிலெடுக்க முற்பட்டாலோ நாங்கள் தாக்குவோம் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான அதிகாரபூர்வ தகவலை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்டுள்ளார். லெபனானில் நடந்து வரும் ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்புடனான மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரவையும் ஒப்புக் கொண்டுள்ளது.

எனினும், போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு இடையே இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார். ""அமெரிக்காவின் முழு புரிதலோடு,




நாங்கள் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கான முழு சுதந்திரம் பெற்றிருக்கிறோம். போர் நிறுத்த ஒப்பந்த மீறலில் ஹிஸ்புல்லா ஈடுபட்டால், ஆயுதங்களை கையிலெடுக்க அவர்கள் முற்பட்டால், நாங்கள் தாக்குவோம்.

எல்லையருகே பயங்கரவாத கட்டமைப்பை எழுப்ப முயன்றால், நாங்கள் தாக்குவோம். ஒரு ரொக்கெட்டை ஏவினாலும், சுரங்கம் ஒன்றை தோண்டினாலும், ரொக்கெட்களை சுமந்தபடி வானங்களைக் கொண்டு வருகிறது என்றாலும் நாங்கள் தாக்குவோம் என்று பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.(எ)

# குற்றப்பத்திரிகையில் அதானி பெயர் இல்லை

புதுடில்லி, நவ. 29

அதானி விவகாரம் குறித்து விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் பாராளுமன்ற இரு அவைகளும் முடங்கின. இதற்கிடையே, அமெரிக்க நீதித் துறையின் குற்றப்பத்திரிகையில் கௌதம் அதானியின் பெயர் இல்லை என்று அதானி குழுமம் விளக்கமளித்துள்ளது.



அதானி குழுமத்தின் 3 இயக்குநர்களும் ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டதாக இந்திய மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த பல்வேறு ஊடகங்கள் தவறான புரிதலுடன் பொறுப்பற்ற வகையில் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. எனவே, அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் தொடர்பாக ஊடகங்களில் வெளியாகும் அறிக்கைகள் தவறானவை. அமெரிக்க குற்றப்பத்திரிகை இலஞ்ச குற்றச்சாட்டை பற்றி மட்டுமே விவாதிக்கிறது.

அதானி நிர்வா கிகளிடம் இருந்து இந்திய அரசின் அதிகாரிகள் இலஞ்சம் பெற்றதற்கான எந்த ஆதாரத் தையும் அது வழங்கவில்லை என்பதை கருததில் கொள்ள வேண்டும் என்று அதானி குழுமம் தெரிவித்துள்ளது. (எ)


# அதானியை சிறையில் அடையுங்கள்

புதுடில்லி, நவ. 29

அதானியை சிறையில் அடைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி தெரிவித்தார்.

அதானி தன் மீதான குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொள்வார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அப்படியானால் எந்த உலகத்தில் நீங்கள் வாழ்கிறீர்கள்? சிறிய, சிறிய குற்றங்களுக்காக நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்படுகின்றனர். ஆனால், ஆயிரக்கணக்கான கோடிகளை இலஞ்சமாக கொடுத்ததாக அமெரிக்க நீதித் துறையால் குற்றம்சாட்டப்படும் நபரை இந்திய மத்திய அரசு பாதுகாக்கிறது. எனவே, அதானியை உடனடியாக கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்- என்றார். (எ)

# தென்கொரியாவில் கடும் பனிப்பொழிவு



சியோல், நவ. 29

தென்கொரியாவில் கடுமையான பனிப்பொழிவு நிலவி வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தென்கொரியாவில் குளிர்காலம் தொடங்கியுள்ளது. வருடம் தோறும் டிசெம்பர் முதல் மார்ச் வரை அங்கு கடுமையான குளிர் நிலவும். தற்போது சற்று முன்பே குளிர்காலம் தொடங்கியிருக்கிறது. இதனால், அங்குள்ள குவாங்கன், வடக்கு சங்சியாங், வடக்கு ஜிலாங் உள்ளிட்ட மாகாணங்களில் கடுமையான பனிப்பொழிவு நிலவுகிறது.

பனிப்புயல் உருவாகி வலுப்பெற்று வருவதால், தலைநகர் சியோல், இன்ஞ்சியான் உள்ளிட்ட நகரங்களில் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாடசாலை கள், கல்லூரிகள் சில நாட்களாக மூடப்பட்டுள்ளன.

கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத வகையில் அங்கு கடுமையான பனிப்பொழிவு நிலவி வருகிறது. (எ)

# பழங்குடியினர் இடையே பாகிஸ்தானில் மோதல்

## 76 பேர் பலி, பலர் படுகாயம்

இஸ்லாமாபாத், நவ. 29

பாகிஸ்தானில் பழங்குடியின குழுக்கள் இடையே ஏற்பட்ட தொடர் மோதல்களில் 76 பேர் பலியாகினர். பலர் காயமடைந்தனர்.

பாகிஸ்தான் நாட்டின் கைபர் பக்துன்குவா மாகாணத்தின் லோயர் குர்ரம் மாவட்டத்தில் பழங்குடியின குழுக்கள் இடையே தொடர்ந்து மோதல் ஏற்பட்டு வருகிறது. ஒரு வாரத்துக்கும் மேலாக நடந்து வரும் இந்த மோதலில் பலர் பலியாகி வருகின்றனர்.

துப்பாக்கி சூடு மற்றும் தீ வைப்பு உள்ளிட்ட தாக்குதல்களில் 21 பேர் பலியாகினர். இதனைத் தொடர்ந்து, அதிகாரிகள் அந்தப் பகுதிக்கு சென்று சமரசத்துக்கான போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தினர். எனினும், நேற்று முன்தினம் மீண்டும் மோதல் வெடித்தது.

கோஜாகரி, மதசாநகர் மற்றும் குஞ்ச் அலிஜாய் ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட மோதல்களில் 3 பேர் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர். இதனையடுத்து, வன்முறைகளால் பலி எண்ணிக்கை 76 ஆக அதிகரித்தது. (எ)

# ஆப்கானில் சட்ட நடவடிக்கையால் 300 பத்திரிகையாளர்கள் பாதிப்பு

காபூல், நவ. 29

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சியின் கீழ் பல்வேறு சட்ட நடவடிக்கைகளால் 300இற்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டில் உள்ள ஐ. நா. உதவிக்குழு தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021இல் ஆட்சியைக் கைப்பற்றிய தலிபான்கள், 3 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து ஆட்சி செய்து வருகின்றனர். தலிபான்களின் ஆட்சியில் பத்திரிகையாளர்களின் நிலை தொடர்பில் ஐ. நா. உதவிக் குழு மற்றும் மனித உரிமைகள் அலுவலகம் ஆய்வறிக்கை தாக்கல் செய்துள்ளது. அந்த ஆவணத்தில், 2021இல் தலிபான்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததில் இருந்து 300இற்கும் மேற்பட்ட ஆப்கானிஸ்தான் ஊடகவியலாளர்கள் உரிமை மீறல்களுக்கு உள்ளாகியுள்ள னர். பத்திரிகையாளர்களுக்கு எதிரான உளவியல் சித்திரவதைகள் மற்றும் தன்னிச்சையான கைது வழக்குகள் இதனை வெளிப்படுத்துகின்றன.

ஆப்கானிஸ்தானின் ஊடகத்துறை மூன்று ஆண்டுகால தலிபான் அரசாங்கத்தின் கீழ் அதிர்ச்சி தரும் வகையில் சுருங்கியுள்ளது. பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகங்கள், தணிக்கை மற்றும் இறுக்கமான கட்டுப்பாடுகள் நிறைந்த சூழலில் செயல்படுகின்றன. 2021இல் தலிபான்கள் ஆட்சியை கைப்பற்றியதில் இருந்து கடந்த செப்ரெம்பர் வரையிலான காலகட்டத்தில் 336 பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதை ஆவணங்கள் உறுதிப்படுத்து கின்றன. இதில் 256 பேர் தன்னிச்சையான கைது மற்றும் தடுப்புக் காவல் நடவடிக்கைக்கு உள்ளாகி இருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிநிதித்துவமும் பரவலாக்கமும் தொடர்ந்தும் அவசியமானவை!

புதிய பாராளுமன்றத்தின் கூட்டத் தொடரை ஆரம்பித்துவைத்து தனது அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரையை நிகழ்த்திய ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க பெரும்பாலும் பொருளாதாரத்தை பற்றியும் குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை பற்றியுமே பேசினார். முன்னைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் இணங்கிக்கொண்ட நிபந்தனைகள் அவருக்கு பிரச்சினையாக இருக்கின்றன. மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை பற்றி சிந்திக்காமல் நிதியியல் இலக்குகளை அடைவதற்கு முன்னுரிமை கொடுத்து அந்த அரசாங்கம் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டது.

திசையை மாற்றமுடியாத அளவுக்கு சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை நீண்டதூரம் சென்றுவிட்டதால் அதை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதை தவிர வேறு மாற்றுவழி அரசாங்கதத்துக்கு இல்லை என்பதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டிருக்கிறார். "இரண்டு வருடங்களுக்கும் கூடுதலாக பேச்சுவார்த்தைகள் ஏற்கெனவே முன்னெடுக்கப்பட்டுவிட்டன. ஒரு நீடித்த காலத்துக்கான மறுசீரமைப்பு செயற்திட்டம் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நாம் மீண்டும் ஆரம்பிப்பதானால், பொருளாதாரத்தை முனாேனாக்கி நகர்த்துவது எமக்கு சாத்தியமில்லாமல் போகும் " என்று அவர் கூறினார்.

முன்னைய அரசாங்கம் நாட்டை ஒரு இறுக்கமான சூழ்நிலைக்குள் தள்ளிவிட்டதால், சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை மீளப் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தி வறிய மக்களுக்கு வாய்ப்பான நிலைமையை ஏற்படுத்துவதாக தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதியை அரசாங்கத்தினால் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுக்க முடியாமல் இருக்கிறது. கடந்த இரண்டு வருடங்களாக வறுமை மட்டம் இரண்டு மடங்காகி மக்களின் இடர்பாடுகள் அதிகரித்திருக்கும் நிலையில், பொருளாதார உறுதிப்பாட்டை இடருக்குள்ளாக்காமல் சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையை தொடரவேண்டியது அரசாங்கத்துக்கு அவசியமாகிறது.

பொருளாதாரத்தை பொறுத்தவரை, நாடு மிகவும் சிக்கலான நிலையில் இருப்பதுடன் அரசாங்கமும் புதிய ஒன்றாக இருப்பதால், மத்தியமயப்படுத்தப்பட்ட ஒரு முறையில் தீர்மானங்களை எடுப்பதிலேயே அது நாட்டம் காட்டும். அலசாங்கத்தின் மையக்குழுவாக மார்க்சிய கோட்பாட்டைப் பின்பற்றும் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) இருப்பது இந்த மத்தியமயப் போக்கிற்கு வலுச் சேர்ப்பதாக அமையும்.

அதன் பிரகாரம் அரசாங்கம் இனம், மதம் அல்லது பிராந்தியத்துக்கு ஒரு இடங்கொடுப்பதை விடவும் ஒரு மத்தியமய நோக்கிலேயே பொருளாதார பிரச்சினைகளை கையாளுவதற்கு முன்னுரிமை கொடுக்கும். அரசாங்க அமைச்சர்களை தெரிவுசெய்த முறையில் இந்த மத்தியமய மற்றும் ஒரேமாதிரியான அம்சத்தைக் காணக்கூடியதாக இருக்கிறது. இனம், மதம் அல்லது பிராந்தியம் போன்ற ஏனைய பண்பும்கூறுகளுக்கு மேலாக கட்சி உறுப்புரிமைக்கே அரசாங்கம் கூடுதல் முக்கியத்துவத்தை கொடுத்திருக்கிறது.

இனவாதமற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்கப்போவதாக ஜனாதிபதி சூளுரைத்திருக்கிறார். "மக்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தும் இனவாத அரசியல் இந்த நாட்டில் மீண்டும் தலையெடுக்க நாம் அனுமதிக்கப் போவதில்லை. அதே போன்றே எந்த வடிவிலான மதத்தீவிரவாதமும் வேர்விடுவதற்கு அனுமதிக்கப் போவதில்லை.
இனமோதல்களினால் எமது தேசம் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து விட்டது " என்று அவர் கூறினார்.

ஆனால், எல்லோருக்கும் ஒரே மாதிரியான கொள்கைகளும் அணுகுமுறைகளும் நாட்டின் வேறுபட்ட பிராந்தியங்களில் வாழும் வெவ்வேறு இனங்களையும் மதங்களையும் சேர்ந்த மக்கள் எதிர்நோக்கக்கூடிய பிரத்தியேகமான பிரச்சினைகளை கருத்தில் எடுக்கத்தவறக்கூடிய ஆபத்து இருக்கிறது.

**மன்னார் வெளிப்படுத்தல்கள்**

மன்னாரில் தற்போது மக்களின் மிகவும் முக்கிய கரிசனைக்குரியவையாக இருப்பவை பொருளாதாரப் பிரச்சினைகளேயாகும். அந்த முன்னுரிமை கொடுத்து அவற்றை கையாளவேண்டும் என்று அந்த பகுதி மக்கள் விரும்புகிறார்கள். கடந்த வாரம் மன்னாரில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் மூன்று பிரச்சினைகள் குறித்து கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. அதானி குழுமத்தின் காற்றாலை மின் உற்பத்தி திட் டம், அவுஸ்திரேலி யாவை தளமாகக் கொண்டியங்கும் கம்பனி ஒன்று கனிமங் களுக்காக மேற்கொள் ளும் மண் அகழ்வு, புத்தளம் -- மன்னார் வீதியை தரமு யர்த்தல் ஆகியவையே அந்த பிரச்சினைகளா கும்.

அதானி குழுமத்தின தும் அவுஸ்திரேலிய கம்பனியினதும் திட் டங்கள் மன்னார் மக்களுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியவை என்பதுடன் கடல் மட்டம் அதிக ரிக்கும் நிலையில் மக்களின் உயிர்வாழ் வுக்கே அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடி யவை என்பது கூட்டத்தில் பங்கேற்ற சிவில் சமூக உறுப்பினர்களின் நிலைப்பா டாக இருந்தது. காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தின் விளைவாக சுற்றுலாத்துறை யும் கடற்தொழிலும் பாதிக்கப்படக் கூடிய ஆபத்து இருக்கிறது என்றும் சுட் டிக்காட் டப்பட்டது.

இந்த இரு திட்டங்களின் விளைவாகவும் நீண்ட காலத்தில் ஏற்படக்கூடிய எதிர்மறையான விளைவுகள் குறித்து வெளிநாட்டு துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய சுயாதீனமான சுற்றுச்சூழல் மதிப்பீடு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த திட்டங்களுக்கான அனுமதிகள் அந்த பகுதி மக்களின் குறைந்தபட்ச பங்களிப்புடனேயே அரசாங்கத்தனால் பெறப்பட்டிருக்கிறது என்ற விரக்தி காணப்படுகிறது. அதானி குழுமத்தின் திட்டமும் அவுஸ்திரேலிய கம்பனி திட்டமும் அந்த பகுதி மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவை என்பதுடன் நீண்டகால அடிப்படையில் அவர்களது கடற்தொழிலுக்கும் விவசாயத்துக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவையுமாகும்.

இந்த திட்டங்களினால் தங்களது பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்படும் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால், நிர்மாணத்துக்காகவும் அகழ்வுக்காகவும் கொழும்பில் அனுமதி வழங்கப்பட்டதால் அவற்றை தடுப்பதற்கு மன்னார் மக்களினால் எதையும் செய்ய முடியாமல் இருக்கிறது. இந்த திட்டங்கள் தங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தப்போகின்ற அதேவேளை, அவற்றின் பயன்களை மன்னாருக்கு வெளியில் உள்ளவர்களே அனுபவிக்கப் போகிறார்கள் என்று மன்னார் மக்கள் உணருகிறார்கள்.

குறிப்பாக இந்த திட்டங்களில் உயர் மட்டங்களில் தொழில் வாய்ப்புக்ளை வெளியாரே பெறப்போகிறார்கள் என்பது அவர்களது கவலையாக இருக்கிறது. பாதிக்கப்படுகின்ற மக்களின் கருத்துக்களை அறியாமல் கொழும்பில் இருந்து அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதாக அவர்கள் விரக்தி அடைந்திருக்கிறார்கள்.

கலந்துரையாடலில் பங்கேற்றவர்கள் இந்த பிரச்சினைகளுக்கு மேலதிகமாக வேறு பிரச்சினைகள் குறித்தும் கவனத்துக்கு கொண்டுவந்தனர். அவற்றில் முக்கியமானது நீண்டகால நிலப் பிரச்சினையாகும். போர்க்காலத்தில் சில கிராமங்களையே முழுமையாக கையகப்படுத்திய இராணுவம் தொடர்ந்தும் அவற்றை அதன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. அந்த கிராமங்கள் இப்போது இராணுவ முகாமாக இருக்கிறது. அவற்றின் மக்கள் வெளியிடங்களில் வாழ்கிறார்கள். தாங்கள் வெளியிடங்களில் தற்காலிக தங்குமிடங்களில் வாழும்போது தங்களது வீடுகளை இராணும் ஆக்கிரமித்திருப் பதை அந்த மக்கள் காண்கிறார்கள்.

> **இலங்கைக்கான புதிதொருபாதையை வகுப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொண்டிருக்கிறது. அது சகல சமூகங்களையும் அரவணைத்து அவர்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தி பொருளாதார தேவைகளில் ஒரு சமநிலையைப் பேணக் கூடிய பாதையாக அமையவேண்டும்.**

உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து பதினைந்துருடங்களுக் கும் அதிக மான காலம் கடந்து விட்ட போதி லும் கூட பல கிரா மங்கள் இன் னமும் முழுமையாக அல்லது பகுதியாக இராணுவத்தின் ஆக் கிரமிப்பின் கீழேயே இருக்கின்றன. இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் கவனம் செலுத் துவதா க புதிய அர சாங்கம் உறுதி யளித்திருக் கிறது. இந்த பிரச்சினைகளை உரியமுறையில் கையாளு வதற்கு அவை குறித்து அமைச்சரவை யால் உள் ளவர்கள் குரல் கொடுக்க வேண்டியது அவசிய மாகிறது.

**உள்ளக பிரதிநிதித்துவம்**

அமைச்சரவை உறுப்பினர்களை தெரிவு செய்ததில் தேசிய மக்கள் சக்தி நீண்டகாலமாக விசுவாசமான கட்சி உறுப்பினர்களாக செயற்பட்ட அதன் உறுப்பினர்களுக்கே முன்னுரிமை கொடுத்திருக்கிறது. தங்களது உறுப்பினர்களை வைத்தே நாட்டை ஆட்சி செய்யவேண்டும் என்ற நிலைப்பாட்டை கட்சி எடுத்திருக்கிறது. வேறு கட்சிகளுடன் கூட்டணி அமைத்தால் விட்டுக்கொடுப்புக்களைச் செய்யவேண்டிய தேவை இருக்கும் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

அமைச்சரவையில் புதிய உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தேவையான கல்வி மற்றும் முகாமைத்துவ தகைமைகளை கொண்டிருக்கிறார்கள். நற்பெயரைச் சம்பாதித்த பல கல்விமான்ககளையும் டாக்டர்களையும் அமைச்சரவை கொண்டிருக்கிறது.

ஆனால், இலங்கை போன்ற பல இனங்கள், மதங்களைக் கொண்ட பன்முக சமுதாயம் ஒன்றில் அதுவும் இனத்துவமும் மதமும் பெரிய மோதல்களுக்கு காரணமாக இருந்த ஒரு நாட்டில் பிரதிநிதித்துவத்தில் ஒரு சமநிலை பேணப்பட



**கலாநிதி ஜெகான் பெரேரா**

வேண்டிய முக்கியத்துவத்தை மனதில் கொண்டிருப்பது அவசியமாகும். கல்விமான்கள் நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பதற்கு செய்திருக்கக்கூடிய பஙகளிப்புகளை விடவும் அந்த பிரச்சினைகளின் ஒரு பகுதியாகவே பெரும்பாலும் இருந்து வந்திருக்கிறார்கள் என்பதை மறந்து விடமுடியாது.

21 உறுப்பினர்களைக் கொண்ட, ஒப்பீட்டளவில் சிறியதாக அமைந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அமைச்சரவை பாராட்டுக்குரியது. முன்னைய அரசாங்கங்கள் இதை விடவும் இரண்டு மடங்குக்கும் கூடுதலான உறுப்பினர்களுடனான அமைச்சரவையை கொண்டிருந்தன. அதனால் செலவினங்கள் உயர்ந்ததுடன் கட்டுக்கோப்பான ஒரு முறையில் ஆட்சியை நடத்தமுடியாமலும் போனது. அமைச்சர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த வேண்டும் என்ற அக்கறையின் விளைவாக அமைச்சரவையில் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்வதற்கு குறைந்தளவு முன்னுரிமையை அரசாங்கம் கொடுத்துவிட்டது போன்று தெரிகிறது.

குறிப்பாக, அமைச்சரவையில் ஒரு முஸ்லிம் ஒருவர் இல்லாத குறைபாடு முக்கியமாக சுட்டிக் காட்டப்படுகிறது. அந்த சமூகத்தவர்கள் மத்தியில் பெரும் கவலை ஏற்பட்டிருக்கிறது. முஸ்லிம் ஒருவர் அமைச்சரவையில் இல்லாமல் போனது இதுவே முதற்தடவை என்று அவர்கள் குறிப்பாக சுட்டிக்காட்டுகிறார்கள். அமைச்சரவையில் இரு தமிழர்கள் இருக்கின்ற போதிலும் கூட, அவர்களும் வடக்கு, கிழக்கிற்கு வெளியில் உள்ளவர்களாகவே இருக்கிறார்கள்.

பாராளுமன்ற தேர்தலில் தமிழர்களும் முஸ்லிம்களும் பெரும்பானமையாக வாழ்கின்ற வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் சகல பாகங்களிலும் தேசிய மக்கள் சக்தி பெருவெற்றி பெற்றிருக்கிறது. வடக்கில் யாழ்ப்பாணத்திலும் அது வெற்றி பெற்றிருக்கிறது. தேசியக் கட்சி ஒன்று இத்தகைய வெற்றியை பெற்றிருப்பது இதுவே முதற்தடவையாகும். சகல இனங்களையும் மதங்களையும் சேர்ந்த மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருக்கிறார்கள். அதனால் அரசாங்கத்தின் எதிர்காலப் பாதை குறித்து மிகவும் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படுகின்ற அமைச்சரவையில் அந்த சமூகங்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்ய வேண்டியது இன்றியமை யாததாகும்.

இலங்கையின் பன்முக சமூகத்தில், சகல சமூகங்களினதும் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டியது முக்கியமானதாகும். அவ்வாறு அமைந்தால்தான் அந்த சமூகங்களின் தேவைகளையும் அபிலாசைகளையும் அவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

இந்த சவால்களுக்கு அரசாங்கம் தன்முனைப்புடன் முகங்கொடுப்பதன் மூலமாக பெருமளவுக்கு ஒப்புரவானதும் கட்டுக்கோப்பானதுமான ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கான அடித்தளத்தை அமைக்கக்கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுந்தீவு...

நெடுந்தீவில் இருந்து 03 நோயாளரும் அவர்களது 3 உதவியாளர்களும் உலங்கு வானூர்தி மூலம் பலாலி விமான நிலையம் கொண்டு செல்லப்பட்டு தரை வழியாக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## வடக்கு...

இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி குறித்த கலந்துரையாடலொன்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் உலக வங்கியின் தலைவர் அஜே பங்கா ஆகியோருக்கு இடையில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இணையத் தொடர்பாடல் முறையூடாக இடம்பெற்றது.

இதன்போது, புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கம் மற்றும் எதிர்கால அபிவிருத்தி சவால்களை வெற்றிகொள்ள இலங்கைக்கு வழங்க வேண்டிய ஒத்துழைப்புக்கள் குறித்து அஜே பங்கா கருத்து தெரிவித்ததோடு, சுகா தாரம், சமூக பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி உள்ளிட்ட துறைகளில் புதிய வேலைத்திட்டங்களை செயற்படுத்த நிதி மற்றும் தொழில் நுட்ப உதவிகளை வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

பொருளாதார கொள்கைகள், நிதி, போட்டித்தன்மை, முதலீடு, நிறுவன மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்பு உள்ளிட்ட விடயங்களில் தற்போதும் உலக வங்கி இலங்கைக்கு உதவிகளை வழங்கி வருகின்ற நிலையில், எதிர்காலத்தில் விவசாய அபிவிருத்து, நீர் முகாமைத்துவம், பாதுகாப்பு, சுற்றாடல் நிலைத்தன்மை, சமூக மேம்பாடு, உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு மற்றும் டிஜிற்றல் பரிமாற்றம் ஆகியவற்றுக்கும் ஒத்துழைப்பு வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக, கிராமிய பகுதிகளில் வறுமையை ஒழிப்பதற்கு அரசாங்கம் காட்டும் அக்கறை குறித்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, வலுசக்தி துறையின் முதலீடுகளை அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்தியிருப்பதாகவும், சுற்றுலாத் துறை, கடல்சார் தொழில்துறை, அரச நிறுவனங்கள் மற்றும் வலுசக்தி துறைகளை பலப்படுத்தி அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார். (அ)

## ஆழ்ந்த...

திருகோணமலைக்கு வடகிழக்கே சுமார் 110 கிலோமீற்றர் தொலைவில் நிலைகொண்டிருந்த ஆழ்ந்த தாழமுக்கம் நாட்டின் கிழக்கு கடற்கரையை அண்மித்து வடமேற்கு நோக்கி நகர்ந்து செல்வதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, மறு அறிவித்தல் நாட்டை சூழவுள்ள ஆழமான மற்றும் ஆழமற்ற கடற்பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் கடல்சார் மற்றும் மீனவ சமூகத்தை அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகளவிலான பலத்த மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த திணைக்களம் விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிவித்தலில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடமத்திய, மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை பெய்யக் கூடும்.

வடக்கு, கிழக்கு, மத்திய, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் மணித்தியாலத்திற்கு 60 கிலோமீற்றர் வரையில் காற்று வீசக் கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## மாவீரர்...

அவர் மேலும் தெரிவித்ததாவது-

வரலாற்றில் என்றுமில்லாத வகையில் இம்முறை வடக்கில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு அனுமதியளித்துள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது.

ஆனால் வடக்கு மக்கள் இம்முறை போராளிகளையும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனையும் பகிரங்கமாக நினைவு கூர்ந்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பாக அறிவித்து தடை செய்யப்பட்டுள்ளது. உலகில் 32 நாடுகளில் இந்த அமைப்பு தடை செய்யப்பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பை எவ்வாறு வரையறைகளுடன் அனுஷ்டிக்க இடமளிக்க முடியும். இவ்வாறான செயற்பாடுகளினால் எதிர்காலத்தில் ஒசாமா பின் லேடனையும் இலங்கையில் அனுஷ்டிக்க நேரிடும். - என்றார். (அ)

## உயர்தர...

ஜயசுந்தர தெரிவித்தார்.

இதன்படி, உயர்தரப் பரீட்சைகள் நவம்பர் 30, டிசெம்பர் 2ஆம், 3 ஆம் திகதிகளில் நடைபெறமாட்டாது.

நாட்டில் நிலவும் மோசமான கால நிலை காரணமாக 27ஆம், 28ஆம், 29 ஆம் திகதிகளில் உயர் தரப் பரீட்சையை நடத்துவதில்லை என முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

சீரற்ற காலநிலை தணிந்தபோதிலும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நலன் கருதி இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஒத்திவைக்கப்பட்ட ஆறு நாட்களுக்கான உயர்தரப் பரீட்சை பாடங்கள் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர்த்து டிசெம்பர் 21 முதல் டிசம்பர் 31 வரை நடை பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கற்கோவளம்...

மேற்கொண்டு கள நிலவரம் தொடர்பில் ஆராய்ந்தார்.

கடந்த சில தினங்களாக நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக இப் பிரிவுக்குட்பட்ட புனித நகர் கிராமம் வெள்ளத்தால் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

அப் பகுதிக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சம்பத் துய்ய கொன்த வெள்ள நிலைமை தொடர்பில் ஆராய்ந்ததுடன் கிராம மக்களுடனும் கலந்துரையாடினார். இதன் போது இக்கிராமத்தில் ஏற்பட்ட இடர்பாடு தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கு தான் கொண்டு செல்வதாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களிடம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உறுதியளித்துள்ளார். (அ-02)

## அனர்த்த...

முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 21 மாவட்டங்களின் 175 பிரதேச செயலகப் பிரிவுகளில் 1 லட்சத்து 13 ஆயிரத்து 052 குடும்பங்களைச் சேர்ந்த 3 இலட்சத்து 77 ஆயிரத்து 511 பேர் சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் இன்று பிற்பகல் 2 மணிக்கு வெளியிடப்பட்ட அறிக்கை யில் இந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை மழை , வெள்ளம் மற்றும் காற்று காரணமாக 82 வீடுகள் முழுமையாகவும் 1 ஆயிரத்து 465 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

8 ஆயிரத்து 358 குடும்பங்களைச் சேர்ந்த 26 ஆயிரத்து 625 பேர் 267 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## யாழ்ப்பாணத்தில்...

என யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தினால் இது வரை 4,132 குடும்பங்களைச் சேர்ந்த 13,102 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 16 வீடுகளும் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளன. 16 பாதுகாப்பு இடங்களில் 395 குடும்பங்களைச் சேர்ந்த 1414பேர் தங்க வைக்கப்பட் டுள்ளனர்.

ஊர்காவல்துறை பிரதேச செயலர் பிரிவில் 464 குடும்பங்களை சேர்ந்த 1781 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஏழு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 971 குடும்பங்களை சேர்ந்த 3387 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 2 வீடுகள் முழுமையாகவும், 72 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

அத்துடன் 7 அடிப்படை கட்டமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. 7 பாதுகாப்பு இடங்களில் 498 குடும்பங்களைச் சேர்ந்த 1817பேர் தங்க வைக்கப்பட் டுள்ளனர்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தம் மற்றும் இடி மின்னல் தாக்கத்தால் 1563 குடும்பங்களைச் சேர்ந்த 4925பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 6 வீடுகளும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. அத்துடன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 1422 குடும்பங்களை சேர்ந்த 4562 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 5 பாதுகாப்பு இடங்களில் 139 குடும்பங்களைச் சேர்ந்த 430 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 2276 குடும்பங்களை சேர்ந்த 7583 பேர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடு முழுமையாகவும், 11 வீடுகள் பகுதியளவிலும் சேதம் அடைந்துள்ளன. 6 பாதுகாப்பு இடங்களில் 74 குடும்பங்களைச் சேர்ந்த 282 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 217 குடும்பங்களை சேர்ந்த 771 பேர் வெள்ள அர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மூன்று வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அத்துடன் சிறு வர்த்தக நிலையம் ஒன்றும் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் 2 பாதுகாப்பு இடங்களில் 15 குடும்பங்களை சேர்ந்த 51பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 1356 குடும்பங்களை சேர்ந்த 4907 பேர் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 11 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இரண்டு உட்கட்டமைப்புகளும் ஒரு சிறு வர்த்தக முயற்சியும் பாதிக்கப்பட்டுள்ளது. 10 பாதுகாப்பு இடங்களில் 381 குடும்பங்களைச் சேர்ந்த 1341 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 1776 குடும்பங்களை சேர்ந்த 5778 பேர் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 8 வீடுகளும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. அத்துடன் 2 பாதுகாப்பு இடங்களில் 41 குடும்பங்களைச் சேர்ந்த 150பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 1872 குடும்பங்களை சேர்ந்த 6665 பேர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். வீடு ஒன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளது. அத்துடன் 7 பாதுகாப்பு இடங்களில் 156 குடும்பங்களைச் சேர்ந்த 511பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 986 குடும்பங்களைச் சேர்ந்த 3474பேர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 12 வீடுகள் பகுதியளவிலும், மூன்று சிறு வணிக நிலையங்களும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அத்துடன் 3 பாதுகாப்பு இடங்களில் 66 குடும்பங்களைச் சேர்ந்த 232பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 1150 குடும்பங்களைச் சேர்ந்த 3307 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 2 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. ஒரு சிறு வணிக நிலையமும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. அத்துடன் இரண்டு பாதுகாப்பு இடங்களில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 59பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வேலணை பிரதேச செயலர் பிரிவில் 633 குடும்பங்களை சேர்ந்த 2010 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 4 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 8 பாதுகாப்பு இடங்களில் 166 குடும்பங்களைச் சேர்ந்த 455 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 370 குடும்பங்களைச் சேர்ந்த 1233பேர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 6 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 1136 குடும்பங்களைச் சேர்ந்த 1136 பேர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அத்துடன் 4 பாதுகாப்பு இடங்களில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 80பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்-என்றார். (அ-05)

## வடக்கு...

டி.வினோதன் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளராகவும், வைத்தியர் கே.ஜி.சீ.வை.எஸ்.வீ.வீரக்கோன் ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளராகவும், திருமதி பி.எஸ்.என்.விமலரட்ண கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளராகவும், என்.சீ.டி. ஆரியரட்ண வவுனியா பொது வைத்திய சாலை பணிப்பாளராகவும், டபிள்யூ. ஏ.நி. நிசங்க அம்பாறை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளராகவும், எம்.எச்.எம்.அசாத் மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலைப் பணிப்பாளராகவும், டபிள்யூ. கே.சீ.பீ.வீரவத்த கிளிநொச்சி பொது வைத்தியசாலைப் பணிப்பாளராகவும், டி.எம்.ஏ.கே.திசாநாயக்க கிளிநொச்சி மாவட்ட பிரந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளராகவும், எஸ்.என்.வீ.பிரேமதாச முல்லைத்தீவு பொது வைத்தியசாலை பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு பின் அமுலுக்கு வரும் வகையில் இவ் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. (அ)

## பாதுகாப்பு...

எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் துய்ய கொன்த, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கலந்து கொண்டு சீரற்ற காலநிலை தொடர்பான தகவல்களை பிரதேச செயலாளர்கள், அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் துறைசார்ந்த நிபுணர்களுடன் கேட்டறிந்தனர்.

பாதிக்கப்பட்ட மக்களின் தற்போதைய நிலைகள், தொடர்ந்தும் வெள்ளப்பெருக்கு உருவாகுவதற்கான காரணம், உடனடியான தேவைகள், டெங்கு நுளம்பின் தாக்கத்தினை சீராக்குதல், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உலர் உணவு நிவராணம், உடைமை இழப்புக்கான நிதியுதவிகள், சுகாதாரப் பணியாளர்கள், இராணுவத்தினர், முப்படையினரின் பங்களிப்புடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்கல் பற்றி விரிவாக ஆராயப்பட்டன.

இவ்நிகழ்வில் பாதுகாப்புச் செயலாளர், வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், வடமாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன், யாழ்ப்பாணம் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா, பிரதேச செயலர்கள் உள்ளிட்டவர்கள் பலரும் கலந்துகொண்டனர். (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## தென்மராட்சி நெல்வயல்கள் முழுமையாக நீரில் மூழ்கின!

யாழ்ப்பாணம், நவ. 29

நாட்டில் பெய்துவரும் பலத்த மழையினால் தென்மராட்சி பிரதேசத்தில் நெற்பயிர்செய்கை நிலங்கள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளன.

எழுதுமட்டுவாழ், மிருசுவில், கரம்பகம், மந்துவில், மீசாலை, சரசாலை, மட்டுவில், அல்லாரை, கச்சாய், கைதடி, நாவற்குழி, தச்சன்தோப்பு மற்றும் தனங்கிளப்பு நெல் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இதேவேளை குடியிருப்புகளில் வெள்ள நீர் உட்புகுந்துள்ளதுடன், கால்நடைகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கன மழை காரணமாக தென்மராட்சி பிரதேசத்தில் 1,303 குடும்பங்களைச் சேர்ந்த 4156 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 205 குடும்பங்களைச் சேர்ந்த 728 பேர் தற்காலிக முகங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் 11 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 50 குடும்பங்களைச் சேர்ந்த 168 பேரும், போகட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 47 குடும்பங்களைச் சேர்ந்த 281 பேரும், நாவற்குழி - சீயோன் தேவாலயத்தில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 100 பேரும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சமைத்த உணவுகளை பொது அமைப்புகள் மற்றும் பிரதேச இளைஞர்கள் இணைந்து வழங்கின்றனர். (அ)

## வழமைக்கு திரும்பியது ஏ-9 வீதி!


வவுனியா, நவ. 29

சீரற்ற காலநிலை காரணமாக போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்ட யாழ். ஏ-9 வீதியின் போக்குவரத்து வழமைக்கு திரும்பியுள்ளது.

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நொச்சிமோட்டை பாலத்துக்கு அருகாமையில் உள்ள வீதியும் ஓமந்தை நகருக்கு அண்மித்த வீதியும் முற்றாக நீரில் மூழ்கியதாக பொலிஸ் பிரிவு தெரிவித்திருந்தது

இந்நிலையில் ஏ-9 வீதியில் பயணிக்கும் வாகனங்கள் வழமை போன்று வீதியில் பயணிக்க முடியும் என பொலிஸார் அறிவித்துள்ளனர். (அ)

## சேகு இஸ்ஸதீன் காலமானார்



கொழும்பு, நவ. 29

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகர்களில் ஒருவரும் அக்கட்சியின் முதலாவது தவிசாளரும், முன்னாள் ஊடகத்துறை பிரதியமைச்சருமான சட்டத்தரணி (வேதாந்தி) எம்.எச். சேகு இஸ்ஸதீன் நேற்று காலமானார்.

1944 மே 12 இல் பிறந்த இவர் தனது 80ஆவது வயதில் சொந்த ஊரான அக்கரைப்பற்றில் காலமானார். தீவிர சமூக அரசியலில் ஈடுபட்ட அவர், முஸ்லிம் உரிமைகளுக்காக அதிகம் குரல் கொடுத்தார். இலக்கியத் துறையில் அதீத நாட்டம் காட்டிய அவர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபுடன் இணைந்து, முஸ்லிம் காங்கிரஸை ஸ்தாபித்து வளர்த்தெடுத்ததில் பிரதான பங்களித்தவர். 1982ஆம் ஆண்டு, சட்டக் கல்லூரியில் சட்டக் கல்வியை நிறைவு செய்து பின்னர் அரசியலில் ஈடுபட்டார்.

வட,கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராக தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்த அவர், ஊடகப் பிரதி அமைச்சர், ஏற்றுமதி அபிவிருத்தி பிரதியமைச்சர் மற்றும் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் போன்ற பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். கவிதை எழுதுவதில் ஆர்வம் கொண்ட அவர், பல்வேறு நூல்களை எழுதியுள்ளதோடு, அரசியலையும் கவிதை நயத்துடன் மக்கள் முன்கொண்டு சேர்ப்பதில் வித்தகராக விளங்கிய அவர், வேதாந்தி எனும் புனை பெயர் கொண்டு அழைக்கப்பட்டார். (அ)

# வெள்ள வாய்க்கால்களை மூடியுள்ள சட்டவிரோத கட்டடங்களை அகற்றுக!

### வடக்கு மாகாண ஆளுநர் பணிப்பு

யாழ்ப்பாணம், நவ 29

**வடக்கு மாகாணத்தில் வெள்ளம் வடிந்தோடாமல் வெள்ள வாய்க்கால்களை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத கட்டடங்களை இடித்து அகற்றுமாறு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் பணிப்புரை விடுத்துள்ளார். இது தொடர்பில் மீண்டும் மீண்டும் பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.**

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள இடர் நிலைமை தொடர்பில் ஆராயும், இணையவழி கலந்துரையாடல் நேற்று காலை இடம்பெற்றது. இதன்போதே ஆளுநர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ள இடர் பாதிப்புக்கள் தொடர்பில் அந்தந்த மாவட்ட செயலர்கள் மற் றும் மேலதிக மாவட்ட செயலர்களால் ஆளுநருக்கு தெரியப்படுத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருவது தொடர்பிலும் ஆளுநரின் கவனத்துக்கு அவர்கள் கொண்டு வந்தனர்.

அனலைதீவு, எழுவைதீவு போன்ற பிரதேசங்களுக்கு மின்சாரம் பகலில் துண்டிக்கப்பட்டு இரவில் மாத்திரம் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. மின்சார விநியோகத்துக்கு தேவையான எரிபொருள் குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருப்பதாகவும், கடல் பயணத்துக்கு ஏதுவான நிலைமை ஏற்பட்டதும் அவற்றை உடனடியாக கடற்படையினரின் உதவியுடன் கொண்டு செல்வதற்கு தயாராக இருப்பதாகவும் இலங்கை மின்சார சபையின் வடக்குப் பிராந்திய முகாமையாளர் கூட்டத்தில் தெரிவித்தார். அதேவேளை, அந்தப் பிரதேசங்களிலுள்ள மருத்துவமனைகள் மின்பிறப்பாக்கி மூலம் மின்சாரத்தை பெற்று இயங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது பல வெள்ள வாய்க்கால்களில் வெள்ளம் நிரம்பிய நிலையில் இருப்பதால் அதனுள் குப்பைகளைக் கொட்டுவதற்கு முயற்சிக்கக்கூடும் எனவும் அது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் யாழ். மாநகர சபை ஆணையாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

வெள்ளம் வடிந்தோடாமல் இருப்பதற்கு வெள்ளவாய்க்கால்களை ஆக்கிரமித்து சட்டவிரோத கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளமையும் காரணம் எனச் சுட்டிக்காட்டிய ஆளுநர், அவற்றை அகற்ற துரித நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார். அதேபோன்று சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள ஏனைய கட்டடங்களையும் அகற்றுமாறும் ஆளுநர் பணித்ததுடன், திரும்பத் திரும்ப இந்த விடயங்கள் தொடர்பில் பேசிக் கொண்டிருப் பதில் அர்த்தமில்லை என்றும் குறிப்பிட்டார். அடுத்த ஆண்டு இந்த விடயங்கள் அனைத்தும் சீராக்கப்பட்டிருப்பதை அதிகாரிகள் உறுதி செய்யவேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை, வெள்ளம் வடிந்தோடிய பின்னர் கிணறுகளுக்கு குளோரின் இடுவதற்குரிய ஆயத்தங்கள் சுகாதாரத் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதேவேளை நோய் நிலைமைகள் தொடர்பில் கண்காணிப்பதற்குரிய ஏற்பாடுகளும் முழுமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரியப்படுத்தினார். (அ-02)

# உள்ளூராட்சித் தேர்தல் குறித்து தேர்தல் ஆணைக்குழு அவதானம்!

கொழும்பு, நவ. 29

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தக்கூடிய திகதிகள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ. எல்.ரத்நாயக்க தலைமையில் நேற்றுமுன்தினம் கூடிய தேர்தல்கள் ஆணைக்குழு இது தொடர்பில் அவதானம் செலுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தும் திகதி தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், பரீட்சை நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அந்தத் திகதியை நிர்ணயிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

தேர்தலை நடத்துவதற்கான குறிப்பிட்ட திகதி தீர்மானிக்கப்படவில்லை எனவும், எதிர்வரும் நாட்களில் தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் கூடி இறுதித் தீர்மானம் எடுக்கும் எனவும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க குறிப்பிட்டார்.

உயர்நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும். எனவே அதற்கு ஆணைக்குழு தயாராகி வருவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

# பாதிக்கப்பட்ட பல பகுதிகளுக்கு நிவாரணம் சென்றடையவில்லை

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 29

வெள்ளத்தால் இலங்கையின் பல பகுதிகளிலுள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கத்தின் தயார் நிலை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞரணி தேசிய அமைப்பாளர் சமித் விஜே சுந்தர விமர்சித்துள்ளார்.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் தாமதமான நிவாரணப் பணிகள் குறித்தும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சூறாவளி எச்சரிக்கை விடுக்கப்பட்டபோது அரசாங் கம் என்ற வகையில் கூடுதல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவேண்டும். இலங்கை இராணுவத்தின் தொடர்ச்சியான முயற்சிகளைப் பாராட்டவேண்டும். இராணுவம் மிகவும் சிறப்பாக சேவையாற்றியுள்ளது.

எவ்வாறாயினும், பாதிக்கப்பட்ட பல பகுதிகளுக்கு நிவாரணப் பொருட்கள் இன்னும் சென்றடையவில்லை , ஆயிரக்கணக்கான குடும்பங்கள் உதவி தேவைப்படும் அவல நிலையில் உள்ளனர் - என்றார். (அ)

# வடிகாலமைப்புகள் சீரின்மையே வெள்ள அனர்த்தத்துக்கு காரணம்

முல்லைத்தீவு, நவ. 29

வடிகாலமைப்பு சீரின்மையாலேயே அதிகளவான இடங்களில் வெள்ள நீர் தேங்கியிருந்து பாரிய அளவில் வெள்ள அனர்த்தம் ஏற்பட காரணமாக அமைந்ததாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் அனர்த்த நிலமைகள் குறித்து ஆராய்வதற்காக இடம்பெற்ற விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு சமைத்த உணவு வழங்குதல், நிவாரணங்கள் வழங்குதலுடன், தறப்பாள் வழங்கவும் நடவடிக்கை எடுக்குமாறு இதன்போது அவர் கோரினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org